# இலவசமாய்

# வேதாகம நாடுகளை



## சுற்றிவாருங்கள்



P.S. ராஜமணி

45

# இலவசமாய் வேதாகம நாடுகளை சுற்றிவாருங்கள்

பாகம் 1,2

ஆசிரியர்

**P.S.ராஜமணி**

தொடர்பு முகவரி:

P.S.ராஜமணி
100, நாவலர் நகர்
மதுரை - 625 010.

© பதிப்புரிமை : ஆசிரியருக்கே.


✦ முதல் பதிப்பு : 1995
✦ இரண்டாம் பதிப்பு : 1996
✦ மூன்றாம் பதிப்பு : 2000
✦ நான்காம் பதிப்பு : 2002
✦ ஐந்தாம் பதிப்பு : 2009
பிரதிகள் : 2000

***Published by:***

Rev. P.S. Rajamoni
100, Navalar Nagar
Madurai - 625 016.
Tamil Nadu.

*Phone: (0452) 3296346*

Printed at: **Dheva offset Printers**,
Chennai - 5 Ph: 28589656

# முன்னுரை

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடந்த நாடுகள் மொத்தம் பதினொன்று. பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும்போது அவைகளில் வருகின்ற பட்டணங்கள், சிற்றூர்கள், மலைகள், நதிகள் ஆகியவைகளை பெயரளவில் வாசித்து கடந்து செல்லுகிறோம். இவைகளைப் பற்றிய சரியான அறிவு இருக்குமானால் வேதத்தை இன்னும் தெளிந்த, பரந்த அறிவுடன் விளங்கிக் கொள்ள முடியும்.

வேதாகம நாடுகளில் சிலவற்றை நேரில் சென்று இரண்டு முறை பார்க்கும் பாக்கியம் பெற்றேன். அமெரிக்கா, நியுசிலாந்து போன்ற நாடுகளின் இயற்கை வளம் நம்மை பிரமிக்க வைக்கிறது. ஆனால் என்னை பூரிக்க வைத்த நாடுகள் இவைகளல்ல; வேதாகம நாடுகளே.

வேதாகம நாடுகளுக்குச் சென்று வந்த பின் வேதத்தை வாசிக்கும் போது அவைகளில் வரும் இடங்களை நேரில் பார்த்திருப்பதினால் அவை எனது மனக்கண்முன் வரும். அவைகள் மெய்ப் பொருளாய் விளங்குகின்றன. வேதாகமம் ஒரு கற்பனை புத்தகமல்ல, அது சரித்திர சான்றுகளடங்கியது என்ற உண்மை நமது மனதில் ஆழப்பதிந்து விடுகிறது.

வேதாகம நாடுகளுக்கு நேரில் செல்வது கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரு பெரிய அனுபவம் என்று திட்டமாக கூற முடியும். போக முடியாதவர்கள் சோர்ந்து போக வேண்டாம். நீங்கள் இரட்சிக்கப்பட்டவர் என்றால் இந்த நாடுகளையெல்லாம்விட மிகச் சிறப்

பான நாட்டிற்கு இயேசுகிறிஸ்து உங்களை அழைத்துச் செல்வார் என்று அறிந்து மகிழ்ச்சியடையுங்கள். வேதாகம நாடுகளுக்கு போக வாய்ப்புள்ளவர்கள் ஒரு தடவை போய் வாருங்கள். சொத்துக்களை விற்று, கடன் வாங்கிப் போகவேண்டாம். வசதி இருக்குமானால் திட்டமிடுங்கள். சேமித்து வைக்கக் கூடுமானால் சில ஆண்டுகளுக்கு சேமித்து 'வைத்து பின்பு திட்டத்தை செயலாற்றுங்கள்.

இப்போது உங்களை வேதாகம நாடுகளுக்கு இந்த செய்தித் தொடர்மூலம் இலவசமாக கூட்டிச்செல்லுவது மகிழ்ச்சிதானே. வேதாகம நாடுகளைக் குறித்து எழுத வேண்டும் என்ற என்னுடைய நீண்ட நாள் வாஞ்சையை கர்த்தர் இதன்மூலம் நிறைவேற்றுவதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

## வேதாகம நிகழ்ச்சிகள் நடந்த நாடுகள்

| | | |
|---|---|---|
| **1.இஸ்ரேல்** | **5.ஜோர்டான்** | **9.கிரேக்கம்** |
| **2.எகிப்து** | **6.லெபனான்** | **10.இத்தாலி** |
| **3.ஈரான்** | **7.சிரியா** | **11.சைப்ரஸ்.** |
| **4.ஈராக்** | **8.துருக்கி** | |

இவைகளை ஒவ்வொன்றாகக் காண்போம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*ஆசிரியர்*

**பி.எஸ். ராஜமணி.**

## மதிப்புரை

கிறிஸ்துவில் அன்பார்ந்தவர்களே!

வேதாகம நாடுகள் போகமுடியாமல் இருக்கின்ற நம்மைப் போன்றவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இந்தப் புத்தகத்தை வாசிப்பதால் கிடைக்கும். சில ஆண்டுகளுக்கு முன்பாக "இன்னிசையில் நற்செய்தி" பெருவிழாவில் பிரசங்கம் முடிந்தவுடன் கத்தோலிக் கத்தில் இப்படி ஒரு சகோதரரை எழுப்பியிருக்கிறீரே, ஸ்தோத்திரம் ஆண்டவரே என்று கண்ணீரோடு நன்றி சொன்ன ஒரு தேவ மனிதனை நான் முதல் தடவை யாக பார்த்தேன். அவர்தான் அண்ணன் ராஜமணி.

அந்த நாளிலிருந்து கர்த்தர் எங்களுக்குள் ஒரு நெருக்கமான ஐக்கியத்தைக் கொடுத்தார். அண்ணன் ராஜமணி பழகுவதற்கு இனிமையானவர், தாழ்மையா னவர். ஒரு பக்கம் குலுங்க குலுங்க சிரிக்க வைப்பார், மறுபக்கம் கதறி அழ வைப்பார். இத்தகைய தேவ தாசனை இந்த நாட்களிலே கர்த்தர் எழுப்பியிருப்ப தற்காக, கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். நாம் நமது ஜெபத்தில் இவரை தாங்குவது நம்முடைய கடமை. வளர்க இவரது எழுத்துப்பணி.

**கிறிஸ்துவின் பணியில் உங்கள்**
**தந்தை. பெர்க்மான்ஸ்**
**ஜெபத்தோட்டம்,**
**காளையார்கோவில்.**

# அணிந்துரை

போதகர். ராஜமணி அவர்களால் எழுதப்பட்டு வெளியிடப்படும் "**இலவசமாய் வேதாகம நாடுகளை சுற்றி வாருங்கள்**" என்ற புத்தகத்திற்கு அணிந்துரை எழுதுவதில் நான் அதிக மகிழ்ச்சியடைகிறேன்.

போதகர். ராஜமணி நற்செய்தியாளராகவும், அறுவடையின் பத்தாண்டுத் திட்டத்தின் அகில இந்திய இயக்குநராகவும் திறம்பட செயல்பட்டு வருகிறார். இதனூடே உலகம் முழுவதிலும் சென்று கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றி வருகின்றார். தனது நெருக்கடியான ஊழியங்களின் நடுவிலும் தான் கண்டு கேட்டவற்றை புத்தக வடிவில் நமக்குத் தந்து நம்மையும் அந்த அனுபவத்திற்கு நேராக அழைத்துச் செல்வதை இலவசமாய் வேதாகம நாடுகளை சுற்றி வாருங்கள் என்ற இந்த புத்தகத்தைப் படிப்பதன் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

அழகும் இயற்கை வளமும் மிக்க நாடுகளைக் கண்டு பூரிப்படையாத ஆசிரியர், வேதாகம நாடுகளைக் கண்டு அதிக பூரிப்படைந்துள்ளதாக எழுதியிருப்பது அவற்றின் மீதுள்ள அவரது உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

இரண்டு முறை வேதாகம நாடுகளுக்குச் சென்ற ஆசிரியர், அந்த நாடுகளைக் காணாதவர்களுக்குக் கூறுகின்ற ஆலோசனை வினோதமாயுள்ளது. இரட்சிக்கப்பட்டவர்களை வேதாகம நாடுகளை விட மிகச் சிறப்பான நாட்டிற்கு இயேசுகிறிஸ்து அழைத்துச் செல்வார் என்று கூறியிருப்பது அப்படிப்பட்ட வர்களுக்கு அதிக ஆறுதலைத் தருகிறது.

வேதாகம நாடுகளை ஆசிரியர் நேரில் பார்த்து, தான் கண்டவற்றை வேத வசனங்களோடும் வரலாற்றுச் சான்று களோடும் இணைத்து எழுதியிருப்பது, இதைப் படிப்பவர் களின் உள்ளத்தில் புதிய நம்பிக்கையை உருவாக்குவதாய் அமைகிறது. அவர் தந்துள்ள நாடுகளின் புள்ளி விவரங்கள் நம்மை அதிசயப்பட வைக்கின்றன.

இதைப் படிப்பவர்கள் இதில் கூறப்பட்டுள்ள நாடுகளை நேரில் பார்த்த உணர்வைப் பெறுவதோடு வேத வசனங்களை வரலாற்றுச் சான்றுடன் மேலும் உறுதிப்படுத்திக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியரின் முயற்சிக்கு அதிக பாராட்டுகள். தொடர்ந்து அவர் நல்ல பல நூல்களை வெளியிட கர்த்தர் அருள் புரிவாராக.

7.1.95

**Y. ஜெயராஜ்**
தலைவர்,
ஏ.ஜி.சபைகள்.

## சிறப்புரை

எனதருமை நண்பர், உடன் ஊழியர், தேவதாசன், போதகர். பி.எஸ். ராஜமணி எழுதிய **"இலவசமாய் வேதாகம நாடுகளை சுற்றி வாருங்கள்"** என்னும் இந்நூலினை படித்து ஓர் சில வரிகள் எழுத எனக்கு கிடைத்த இப்பேரினை பாக்கிய மாகவே கருதுகின்றேன்.

ஓர் எழுத்தாளனின் தகுதி, தான் எதை, எதற்காக, எவ்விதத்தில் யாருக்கு எழுதுகிறான் என்பதை அறிந்திருத்த லேயாகும். இவை யாவும் இந்நூலினிலே காணலாம்.

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடந்த நாடுகள் மொத்தம் பதினொன்று என ஆசிரியர் தன் முகவுரை யைத் தொடங்கி, திறந்த புத்தகத்தை கரங்களோடு ஏந்திய வாசகர்களாகிய நம்மை 3500 மைல் தூரத்திலிருக்கும் இஸ்ரவேல் நாட்டிற்கே, அவர் எழுதுவது போல விசா, பாஸ்போர்ட், கட்டணம் இல்லாமலேயே தன்னுடனே கூட்டிச் சென்று விடுகிறார்.

அநேகர் வேதம் படிப்பது போர் அடிப்பது போலவும், டல் அடிப்பது போலவும் உணருகின்றனர். உண்மையாய் வாஞ்சையுடன் படிக்கும் தேவ பிள்ளைகளும்கூட விளக்க மின்றி படிப்பதால் பெறவேண்டிய மனநிறைவின்றி வெதும்பு கின்றனர். வேதாகம வரைபடமொன்றையும் திறந்து வைத்து வேதம் படியுங்கள், வேதவசனம் உங்களுக்கு விறுவிறுப்பும், அர்த்தமுட்டுகிறதாயுமிருக்கும் என்றார் ஓர் வேத பண்டிதர்.

வேதாகமத்தில் பட்டணங்களும், ஆறுகளும், மலை களும், சமபூமிகளும், பள்ளத்தாக்குகளும் எங்கே என்று தேடிக்கொண்டு அதனோடு இசைந்து வேத பகுதிகளையும்

படிக்கும் வேதப்படிப்பு அர்த்தபுஷ்டியுள்ளதாக மட்டுமல்ல நம் மனதில் எழுந்து நிரந்தரமாக நிற்க தொடங்குகிறது. இந்த குறிக்கோளுடன் மாத்திரமே ஆசிரியர் இந்நூலினை பக்கு வமாக கையாண்டு தன் பேனாவை தனக்கேற்ற தனிப் பாணியில் அசைத்து நேர்த்தியாய் எழுதியிருக்கிறார்.

வாசகர் எவராயினும் இதனை ஒருமுறை படித்து முடித்தவுடன் தொடரும் நாட்களில் பலமுறை இந்நூலினை நாடும் அவசியம் உண்டாகமலிராது. வேதப் படிப்பு மகிழ்ச்சி யுள்ளதும், மன நிறைவளிப்பதும் வேதாகம சத்தியத்திலுள்ள வெளிச்சம் வளர்ந்து செல்ல இந்நூல் மிகவும் உதவும் என்பதில் எனக்கேதும் ஐயமில்லை. பொதுவாக சரித்திரம் படித்து பழக்கப்படாதவர்கள் இதிலுள்ள சில பக்கங்களை படிக்க ஆரம்பித்ததும் ருசியற்றதாய் காணப்பட்டால் சற்று பொறுமை யாகக் கையாண்டு நிதானமாக படித்து பழகவும், முடிவு இனிமையாக இருக்கும். சந்தேகமேயில்லை.

இது ஓர் அரிய நூல், வித்தியாசமான கோணத்தில் எழுதப்பட்டுள்ளது. எந்நோக்கத்துடன் ஆசிரியரை ஆவியா னவர் இதை எழுதத் தூண்டினாரோ அந்நோக்கம் பரிபூரண நிறைவடைய எனது இதய அடித்தளத்திலிருந்து ஆண்ட வனை நோக்கி எழும்பும் பிரார்த்தனையுடன் முடிக்கிறேன்.

3.1.95

*அவர் பணியில்,*

**தா. ஹென்றி ஜோசப்**

*தலைவர்,*


*மாரநாதா ஸ்தாபன நிறுவனர்*

# பொருளடக்கம்


| | |
|---|---|
| இஸ்ரேல் | 11 |
| ஜோர்டான் | 39 |
| எகிப்து | 44 |
| சிரியா | 51 |
| லெபனோன் | 54 |
| ஈராக் | 59 |
| ஈரான் | 65 |
| துருக்கி | 69 |
| கிரேக்க நாடு | 82 |
| இத்தாலி | 89 |
| சைப்ரஸ் | 94 |



# இஸ்ரேல்



மத்திய தரைக்கடலின் கிழக்குக் கோடியில் இஸ்ரேல் நாடு இருக்கிறது. இஸ்ரேலுக்கு வடக்கே லெபனானும், கிழக்கே சிரியாவும், ஜோர்டானும், தெற்கே சாடி (சவுதி) அரேபியாவும், மேற்கே எகிப்தும், மத்திய தரைக்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன.

இஸ்ரேல் நாட்டின் சரித்திரத்தை சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். பின்னணியத்தை விளங்கிக் கொள்ள இது உதவியாயிருக்கும்.

சுமார் கி.மு.1900ல் ஆபிரகாம் மெசப்பத்தோமியாவை (இன்றைய ஈராக்) விட்டு கானானுக்கு வந்து சேர்ந்தான். அந்நாட்களில் 'HYKSOS' என்ற 'மேய்ப்பர் அரசர்கள்' பாலஸ்தீனாவை ஆண்டு வந்தனர். இந்த அரசர்கள் எகிப்தைச் சேர்ந்தவர்கள். கி.பி.1479 வரை பாலஸ்தீனா எகிப்தியர் வசமிருந்தது. கி.மு.1630ல் யாக்கோபும் அவன் குடும்பமும் யோசேப்புடன் இருக்கும்படி எகிப்திற்கு சென்றனர்.

கி.மு.1250ல் யோசுவா யோர்தானைக் கடந்து பாலஸ்தீனாவை வென்று பன்னிரெண்டு கோத்திரங்களுக்கும் பங்கிட்டான். கி.மு.1200ல் பெலிஸ்தியர் கிரேத்தா தீவிலிருந்து வந்து பாலஸ்தீனாவை தங்கள் வசமாக்கிக் கொள்ள முயற்சித்தனர். கி.மு.1100ல் பெலிஸ்தர் பாலஸ்தீனா முழுவதிலும் குடியேறினர்.

கி.மு.1064 - சிம்சோன் கொல்லப்பட்டான்.

கி.மு.1050 - சவுல் இஸ்ரவேலின் முதல் ராஜாவாக பட்டம் சூட்டப் பெற்றான்.

கி.மு.1000 - தாவீது எருசலேமைப் பிடித்து அதைத் தலைநகரமாக்கினான்.

கி.மு.970 - சாலொமோன் தேவாலயத்தைக் கட்டினான்.

கி.மு.928 - எகிப்திய ராஜா சீஷாக் தேவாலய பொக்கிஷத்தை கொள்ளையிட்டான்.

கி.மு.922 - இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. (இஸ்ரவேல், யூதா)

**பாபிலோனியர் காலம் (கி.மு.605-562)**

கி.மு.586ல் நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடித்து தேவாலயத்தை அழித்தான். அநேகரை பாபிலோனுக்கு சிறைப்பிடித்துச் சென்றான்.

**பெர்சியர் காலம் (கி.மு.549-33)**

கி.மு.539 - செருபாபேலின் தலைமையில் இஸ்ரவேலர் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து தாயகம் திரும்ப ஆரம்பிக்கின்றனர்.

கி.மு.515 - 2வது தேவாலயம் பிரதிஷ்டிக்கப்படல்.

கி.மு.445 - நெகேமியா, எஸ்றா, எருசலேமை திரும்ப எடுப்பித்துக்கட்ட ஆரம்பித்தல்.

**கிரேக்கர் காலம் (கி.மு.334-63)**

கி.மு.334 - மகா அலெக்ஸாண்டர் வெற்றி கண்டான்.

கி.மு.313 - எகிப்திய ராஜா தாலமி எருசலேமை பிடித்தான்.

கி.மு.198 - சிரியா ராஜாவாகிய மூன்றாம் அந்தி யோகஸ் எகிப்தியரை முறியடித்தான் இஸ்ரவேல் அவன் வசமாயிற்று.

கி.மு.169 - 4ம் அந்தியோகஸ் (அந்தியோகஸ், எப்பினஸ்) எகோவா வணக்கத்தை தடை செய்து எருசலேம் தேவாலயத்தில் ஒலிம்பியன் ஜீயஸ் என்ற தேவதையின் சிலையை நிறுத்தி அதை வணங்கும்படி மக்களை வற்புறுத்தினான். பலிபீடத்தில் பன்றியை பலியிட்டான்.

பள்ளிக்கூடத்திலேயே எங்களுக்கு சரித்திரம் வராதே ஏன் எங்களுக்கு இந்த சரித்திரமெல்லாம் என்று சிலர் சலித்துக்கொள்வது காதில் விழுகிறது. ஆனாலும் கொஞ்சம் பொறுமையோடிருங்கள்.

**ஹாஸ்மோனியன் காலம் (கி.மு.167-63)**

செலுக்கிய ராஜாக்களுக்கு விரோதமாக யூதர்கள் கலகம் செய்ய ஆரம்பித்தனர். இதற்குத் தலைவனாக இருந்தவன் வயது முதிர்ந்த மத்தியாஸ். இவனுக்கு உதவியாக இவனுடைய குமாரரும் கலகத்திற்கு தலைமை தாங்கி நடத்தினர். இவன் குமாரன் பெயர் யூதாஸ், மக்கபேயஸ், யோனத்தான், சீமோன் (மக்க பேயஸ் என்றால் சம்மட்டி என்று பொருள்).

**ரோமர் காலம் (கி.மு.63-330)**

கி.மு.63 - ரோமர் இஸ்ரவேலைப் பிடித்தனர். இதற்கு தலைமை ஏற்றவன் பாம்பி (Pompey).

கி.மு.39 - கி.பி.4 - மகா ஏரோது (Herod the Great) ஆட்சி.

கி.பி.30 - இயேசு சிலுவையிலறையப்பட்டார்.

கி.பி.66 - யூதரின் முதல் கலகம், தலைவன் ஜெலட்ஸ்.

கி.பி.70 - ரோம பேரரசன் வெஸ்பேசியனின் மகன் தீத்துவினால் எருசலேம் அழிக்கப்பட்டது.

கி.பி.132-135 - யூதரின் 2ம் கலகம். தலைவன் பார் - ரோக்பா. ஹேட்ரியன் எருசலேமை திரும்ப எடுப்பித்து ரோம பட்டணமாக கட்டினான். யூதேயா என்று இருந்த பெயரை 'சிரியா பாலஸ்தீனா' என்று மாற்றினான். 'பிலிஸ்தியரின் சிரியா' என்று பொருள். பாலஸ்தீனா என்ற பெயர் இப்படித்தான் உதயமானது.

கி.பி.330-634 - பைசாண்டின் காலம் (ரோமர்) ரோம பேரரசன் கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவனானபோது பாலஸ்தீனாவில் சபைகள் வளர்ந்து பெருக ஆரம்பித்தன.

**இரண்டாம் பெர்சிய காலம் (கி.பி.607-629)**

கி.பி.614 மே 20ம் தேதி எருசலேம் பிடிபட்டது. 33877 பேர் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவ ஆலயங்கள் அழிக்கப்பட்டன.

**அரேபியர் காலம் (கி.பி.634-1099)**

கி.பி.570ல் முகம்மது நபி மெக்காவில் பிறந்தார். மெதினாவில் வளர்ந்தார். இஸ்லாம் மதம் நிறுவப்பட்டு அரேபியாவில் பரவியது.

கி.பி.636ல் பாலஸ்தீனா அரேபியர் வசமாயிற்று. மெக்கா, மெதினாவிற்கு அடுத்த 3ம் புனித பட்டணமாக எருசலேம் கருதப்பட்டது.

கி.பி.1009ல் பேடிமிட் கலிப் ஹாகிம் என்பவன் பரிசுத்த கல்லறை ஆலயத்தை அழிக்கும்படி கட்டளையிட்டான். சின்ன ஆசியாவிலுள்ள 30,000 கிறிஸ்தவ கட்டிடங்கள் இடிக்கப்பட்டன. இந்த தீயசெயல் கிறிஸ்தவர்களை கொதித்தெழ வைத்தது. குருசேடர் என்ற கிறிஸ்தவ சேனை எழும்பிற்று.

**குருசேடர் காலம் (கி.பி.1099-1268)**

கி.பி.1099 - எருசலேம் குருசேடரால் பிடிக்கப்பட்டது.

கி.பி.1263-1516 - சுல்தான் மாமிலக் ஆட்சியில் பாலஸ்தீனா.

கி.பி.1517-1917 - துருக்கியர் வசத்தில் பாலஸ்தீனா

கி.பி.1917 - பிரிட்டிஷ் தளபதி ஜெனரல் ஆலென்பி உலக மகா யுத்தத்தில் எருசலேமை பிடித்தான்.

கி.பி.1948 - இஸ்ரவேல் சுதந்திரமடைந்தது.

இஸ்ரவேல் எவ்விதம் சுதந்திரமடைந்தது என்பதை விளக்க விரும்புகின்றேன்:

*அத்தி மரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும் போது, வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள்*

*காணும்போது அவர் (இயேசுகிறிஸ்து) சமீபமாய் வந்திருக்கிறார் என்று அறியுங்கள் (மத்தேயு 24: 32,33).*

அத்திமரம் யூத மக்களைக் குறிக்கும் (எரேமியா 24:1-8).

கி.பி.66 மற்றும் கி.பி.132-135 ஆண்டுகளில் ரோம ஆட்சிக்கு விரோதமாக யூதர்கள் கலகம் பண்ணினதாக பார்த்தோம். கி.பி.70ல் எருசலேம் அழிக்கப்பட்டது. யூதர்கள் பல நாடுகளுக்கும் சிதறி ஓடினர். இஸ்ரவேல் (யூதேயா) என்ற பெயர் உலக படத்தில் இல்லாமல் போயிற்று.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு இஸ்ரவேலர் மீண்டும் தங்கள் தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப் பட்டது. வேதத்தை விசுவாசித்தவர்கள் அவ்விதமாக போதித்து வந்தனர். ஆனால் வேறு அநேகர் இனி இஸ்ரவேலர் கூட்டி சேர்க்கப்பட மாட்டார்கள். இஸ்ரவேல் என்ற நாடு உருவாகாது என்று போதித் தனர். வேதத்தில் கூறப்பட்டுள்ளபடி அத்திமரம் துளிர்விட ஆரம்பித்தது. இஸ்ரவேல் என்ற நாடு உருவானவிதம் அற்புதமானது.

## அத்திமரம் துளிர்விட்ட விதம்

கி.பி.1896ல் டாக்டர். தியோடர்ஹெர்ஸ் **(Dr. Theodore Herze)** என்ற யூத அறிவாளி "யூதரும் பாலஸ்தீனாவும்" **(The Jews and Palestine)** என்ற புத்தகத்தை எழுதி 72 நாடுகளிலும், சிதறியிருந்த யூதர் களுக்கு அனுப்பினார். யூதர்களுக்குள் அனல் மூண்டது.

கி.பி.1897 ஆகஸ்ட் 29ல் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள பாஸல் (BASLE) என்ற ஊரில் முதலாவது ஒரு காங்கிரஸ் மாநாட்டை கூட்டினார். இதன் பலனாக இவருடைய தலைமையிலேயே "சீயோன் சங்கம்" நிறுவப்பட்டது (நிறைவேறுதல் எரே.31:6). அவருக்குப் பின் டாக்டர். சேய்ம் வெய்ஸ்மேன் (Dr. Chaim Weizman) தலைவரானார்.

கி.பி.1909ல் இவருடைய முயற்சியால் கலிலேயாக் கடற்கரையின் தெற்குக் கோடியில் முதலாவது யூத சமுதாய குடியிருப்பு ஏற்பட்டது. இதே ஆண்டில் டெல் அவிவ் பட்டணம் உதயமாயிற்று. இந்த சமயம் பாலஸ்தீனா துருக்கியர் வசம் இருந்தது. விலைக் கிரயமாக பாலஸ்தீனாவை தரும்படி யூதர்கள் துருக்கியரிடம் கேட்டனர். துருக்கி சுல்தான் சொன்னார்: "எகிப்து நைல் நதியின் தண்ணீர் பாலஸ்தீனா நாட்டிற்குள் பாயும் காலம் வருமானால், அப்போது இந்த நாட்டை உங்களுக்கு சொந்தமாக கொடுப்போம்".

## முதல் உலக மகா யுத்தம்

முதலாம் உலகப் போர் 1914ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 4ம் தேதி ஆரம்பமானது. 1918ம் வருடம் நவம்பர் மாதம் 11ம் தேதி முடிவடைந்தது. பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் நடந்த யுத்தமாயினும் 33 நாடுகள் பங்குபெற்றன. எனவே உலக மகா யுத்தம் என அழைக்கப்பட்டது. இப்போரினால் 4 கோடி போர் மாண்டனர். சுமார் 11 லட்சம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

யுத்தம் ஆரம்பித்த இரண்டு ஆண்டுகளில் பிரிட்டனுக்கு வெடி மருந்தின் மூலப் பொருட்கள்

கிடைத்த இடங்களை ஜெர்மானியர் பிடித்துக் கொண் டனர். பிரிட்டன் தோற்றுப்போகும் நிலை ஏற்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டிருந்த துருக்கியர் ஜெர்மா னியர் பக்கம் சாய்ந்து கொண்டனர்.

இங்கிலாந்தில் மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் இரசாயன பேராசிரியராக டாக்டர். வெய்ஸ் மேன் பணியாற்றி வந்தார். இவர் ரஷ்ய யூதன், சீயோன் சங்கத் தலைவர். இவரிடம் வெடி மருந்து ஒன்றை கண்டுபிடித்துத் தரும்படி கேட்டனர். இவர் **T.N.T. GAS** என்னும் நச்சு வாயு மருந்தை கண்டு பிடித்துக் கொடுத்தார். அது கப்பலில் கொண்டு செல்லப்பட்ட போது கெட்டுப்போக கூடியதாயிருந்தது.

யோபு 38:22,23ம் வசனங்களை அவர் வாசித்த போது பனிக்கட்டிகளுக்குள் வைத்துக்கொண்டு போ னால் கெட்டுப்போகாது என்பதை கண்டு அப்படியே செய்யும்படி கூறினார். பிரிட்டன் வெற்றி பெற்றது.

பிரிட்டிஷ் அரசாங்கம் டாக்டர். வெய்ஸ்மேன் செய்த உதவிக்கு பரிசு கொடுக்க விரும்பியது. டாக்டர். வெய்ஸ்மேன் எங்கள் தாய்நாட்டை எங்களுக்குத் தாருங்கள் என்றார். அதன்படி 1917 நவம்பர் 2ல் “பாலஸ்தீனா யூத ஜாதியினருடைய குடியிருப்பு நாடு, அவர்களின் தாய்நாடு” என்று பிரிட்டன் வெளியுறவு காரியதரிசி ஆர்தர் ஜேம்ஸ் பிரகடனம் செய்தார். இதற்கு பால்பர் அறிக்கை **(BALFOUR'S DECLARATION)** என்று பெயர். யூதர்கள் இங்கிலாந்து பிரஜைகளாக பாலஸ்தீனாவில் குடியிருக்கலாம் என்பது பொருள்.

ஜெனரல் ஆலென்பி ஒரு யூத கிறிஸ்தவன். பாலஸ்தீனாவை துருக்கியரிடமிருந்து கைப்பற்ற

பிரிட்டிஷ் அரசாங்கம் இவரை அனுப்பிற்று. இவர் முதல் மகா யுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றி தேடி தந்தவர்.

புனித நகரத்தின்மேல் குண்டு போட்டு கைப்பற்ற அவர் விரும்பவில்லை. பிரிட்டிஷ் மன்னருடைய ஆலோசனையைக் கேட்டார். மன்னர் ஜெபம்பண்ணி விட்டு கர்த்தர் உம்மை நடத்துகிறபடி செய்யும் என்று எழுதி அனுப்பினார். ஜெபித்தார். கர்த்தர் ஞானம் கொடுத்தார். அரபி மொழிகளில் துண்டுப் பிரதிகள் அச்சிட்டு விமானங்கள்மூலம் எருசலேமுக்குள் போட்டார்கள்.

அதில் எழுதியிருந்த விவரமாவது:

"முதலாவது உலக மகா யுத்தத்தை நடத்தின ஜெனரல் ஆலென்பி நான். எருசலேம் குடிகளாகிய நீங்கள் துருக்கியருடைய ஆட்சியை நிராகரித்து விட்டு ஆங்கிலேயரிடம் சரணடைந்தால் உங்களுக்கு இன்னின்ன நன்மைகளைச் செய்வோம். இல்லாவிடில் எருசலேம் நகரத்தையும் அதன் குடிகளையும் அழித்து விடுவோம்". அதுவரை விமானங்களைக் கண்டிராத துருக்கியர்கள் விமானங்கள் நகரத்தின்மேல் பறக்கிறதைக் கண்டு பட்டணத்தைவிட்டு ஓடினர். பட்டணத்திலிருந்த அரபியரும் துருக்கியரும் துண்டுப் பிரதிகளைப் படித்து பயமடைந்தனர்.

ஏனெனில் 'ஆலென்பி' என்பது அரபி மொழியில் 'அல்லாவின் விரோதம்' அல்லது 'அல்லாவின் கோபம்' என்று பொருள்படும். அதுமட்டுமல்ல 'அல்லா என்பாயி' என்றால் 'அல்லாவின் தீர்க்கத்தரிசி' என்றும்

பொருள் கொள்ளலாம். அல்லாவே படையெடுத்து வந்துவிட்டதாக பயந்தனர். ‘ஆலென்பி’ என்று கத்திக் கொண்டே ஓடினர். சரண் அடைந்தனர்.

1917 டிசம்பர் 9ம் தேதி எருசலேம் நகர கவர்னரும் சரணடைவதாக கடிதம் எழுதி எருசலேம் மேயரிடம் கொடுத்துவிட்டு வெளியேறினார். மேயரும் நான்கு அராபிய தலைவர்களும் குதிரையில் வந்து ஆலென்பி யிடம் சரணடைகிறோம் என்று யோப்பா வாசல் சாவியை ஒரு கடிதத்தில் வைத்து கொடுத்தனர். மகிழ்ச்சியுடன் ஆலென்பியும், அவரின் சேனையும் பட்டணத்திற்குள் பிரவேசிக்க அணியணியாய் வந்தனர்.

ஆலென்பி தன் ஒரு கையில் வேதத்தையும், மறு கையில் யோப்பா வாசலின் சாவியையும் பிடித்துக் கொண்டு முன்சென்றார். வாசலை அணுகியதும் குதிரையிலிருந்து கீழே இறங்கி தலையிலிருந்த தொப்பியை எடுத்துவிட்டு பரிசுத்த நகரத்தை தலை குனிந்து வணங்கினார். இரத்தம் சிந்தாமல் எருசலேம் பிடிக்கப்பட்டது. போர் விமானங்கள் பாதுகாப்பிற்காக பறந்துகொண்டிருந்தன (ஏசாயா 31:5).

**எருசலேமை பிடித்த தேதி யூத கணக்குப்படி 1917ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ந் தேதி.** இந்த நாள் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

1. ஆலயத்தில் அஸ்திபாரம் போடப்பட்டது 9ம் மாதம் 24ந் தேதி. (ஆகாய் 2:18,19)
2. கி.மு.170ல் சிரியா தேசத்து ராஜா அந்தியோகஸ் எப்பிபினஸ் எருசலேம் தேவாலயத்தை தீட்டுப் படுத்தினான். கி.மு.165ல் யூதாஸ் மக்கபீஸ் என்று

பிரதான ஆசாரியன் தீட்டுப்பட்ட ஆலயத்தை சுத்திகரித்து பிரதிஷ்டை செய்தான். பலி செலுத்த ஆரம்பித்தான். இதுவும் 9ம் மாதம் 24ந் தேதி. யோ. 10:22ல் கூறப்பட்டுள்ள பிரதிஷ்டை பண்டிகை இதுவே.

முதல் உலக மகாயுத்தம் முடிந்த நாள் 1918 நவம்பர் 11ம் தேதி 11 மணி. சிறிது நேரத்திற்குள் "சர்வதேச சங்கம்" **(League of Nations)** ஸ்தாபிக்கப் பட்டது. பாலஸ்தீனா ஆங்கிலேயருக்கும், சிரியா பிரெஞ்சுக்காரருக்கும் கொடுக்கப்பட்டது. இவை இரண்டும் அதுவரை துருக்கியரிடமிருந்து.

## இஸ்ரவேலர் கூட்டி சேர்க்கப்பட்டனர்

1920ல் யூதர்கள் முதலாவது பிரிட்டிஷ் கப்பல் களில் வந்தனர். இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து வந்து குடியேற ஆரம்பித்தனர்.

விமானங்களில் வந்தனர் (ஏசாயா 60:8). குதிரை இரதங்கள், வண்டிகள் மூலமாக வருவார்கள் என்று ஏசாயா 66:20ல் கூறப்பட்டது நிறைவேறிற்று. (ஏசாயா 11:11,12; எசேக்.36:24; எரே.31:8; ஏசாயா 43:6,8; உபா. 30:1-5; ஆமோஸ் 9:9; ஏசாயா 66:20).

## இரண்டாம் உலக மகா யுத்தம்

1939ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ம் தேதி இரண்டாம் உலகப் போர் துவங்கியது. 1945ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ம் தேதி முடிவடைந்தது.

ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் 1945 அக்டோபர் 24ம் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. 1947 நவம்பர் 29ம் தேதி ஐ.நா.

பாலஸ்தீனாவை பங்கிட ஓட்டளித்தது. 3 பங்கு யூதருக்கு, 3 பங்கு அரபியருக்கு, 1 பங்கு சர்வ தேச சொத்து என்று பங்கிட்டது.

1948 மே 14ம் தேதி காலை 9 மணிக்கு டெல் அவிவ் பட்டணத்தில் பிரிட்டிஷ் கொடி இறக்கப் பட்டது. மாலை 4 மணிக்கு பிரதம மந்திரியாக இருந்த டேவிட் பென்குரியன் இஸ்ரவேல் என்ற யூத நாட்டை பிரகடனப்படுத்தினார். இரவில் தாவீதின் கொடி உயர்த்தப்பட்டது.

இஸ்ரவேல் நாட்டைக் குறித்த பின்னணியத்தை சுருக்கமாக விளக்கினேன். இப்போது நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் பயணத்தை ஆரம்பிக்கப் போகிறோம்.

எக்ளிசியா பிளைட் 777ஐ எடுப்போம். இதற்கு பாஸ்போர்ட், விசா, பயணக்கட்டணம் ஒன்றும் வேண் டாம். முற்றிலும் இலவசம். இந்தியாவிலிருந்து சுமார் 3500 மைல் தூரத்தில் இஸ்ரவேல் நாடு இருக்கிறது. இண்டர்நேஷனல் விமான நிலையம் டெல் அவிவ் பட்டணத்தில் இருக்கிறது எனவே மும்பை அல்லது டெல்லியிலிருந்து சுமார் 5 மணி நேரத்தில் நாம் டெல் அவிவ் பென்குரியன் விமான நிலையத்திற்கு வந்து சேருகிறோம்.

### டெல் அவிவ்

1909ல் தான் இந்த டெல் அவிவ் பட்டணம் உதயமாயிற்று. இன்று இஸ்ரவேல் நாட்டிலே ஒரு பெரிய பட்டணமாக வளர்ந்துள்ளது. இது ஒரு கடற்கரை பட்டணம், இதன் மேற்கு எல்லை மத்திய

தரைக்கடல். தற்போது இதன் மக்கள் தொகை 14,70,000. டெல்அவிவிலிருந்து நாம் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் புனித பட்டணமாகிய எருசலேமுக்கு பஸ்ஸில் போகப்போகிறோம். இங்கிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தென்கிழக்கில் எருசலேம் அமைந்துள்ளது. டெல்அவிவிலிருந்து நாம் எருசலேமை நோக்கிப் போகும் போது சில மைல் தூரத்தில் வருவது யோப்பா.

**யோப்பா**

சாலொமோன் காலத்தில் தேவாலயம் கட்ட லீபனோனின் மரங்கள் கடல் வழியாய் இந்த யோப்பாவிற்கு கொண்டுவரப்பட்டு எருசலேமுக்கு தரைமார்க்கமாய் எடுத்துச் செல்லப்பட்டன. யோனா தர்ஷீசுக்குப் போக கப்பல் ஏறினதும் இங்கே தான். தொற்காள் என்ற பெண் வாழ்ந்ததும் இந்த ஊரில் தான் (அப்.9:36-43). பேதுரு தங்கியிருந்த சீமோன் வீடும் இங்கேதான் இருக்கிறது. பேதுரு தரிசனம் கண்டதும் இங்கேதான் (அப்.10:5-16). சரி, புறப்படுவோம் எருசலேம் நோக்கி, இங்கிருந்து ஒரு மணி நேரத்தில் எருசலேம் போய் சேர்ந்துவிடலாம். வழி நெடுக பழத்தோட்டங்களை காணலாம். எருசேலம் வந்து விட்டோம்.

**எருசலேம்**

இஸ்ரவேல் நாட்டில் அதிகமாய் மதிக்கப்படும் பட்டணம் இது. கடல் மட்டத்திலிருந்து 2500 அடி உயரமுள்ளது. மத்திய தரைக்கடலுக்கு கிழக்கே 50 கிலோ மீட்டர், சவக்கடலுக்கு மேற்கே 22 கிலோ

மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. கி.மு.15ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட எகிப்திய, பாபிலோனிய ஏடுகளில் 'உருசலிமு' என்று இது அழைக்கப்பட்டுள்ளது. ஆபிரகாமின் காலத்தில் 'சாலேம்' என்று அழைக்கப்பட்டது (ஆதி.14:18). 'சாலேம்' என்றால் 'சமாதானம்' என்று பொருள். எபூசியர் இதில் வாழ்ந்ததால் எபூசு என்றும் அழைக்கப்பட்டது.

கி.மு.1000ல் தாவீது தன் தலைநகரை எபிரோனிலிருந்து எருசலேமுக்கு மாற்றினான். பின்பு மோரியா மலைக்கு உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு வந்தான். சாலொமோன் இங்கே தேவாலயம் கட்டினான். கி.பி.70ல் இது ரோம பேரரசன் மகன் தீத்துவால் அழிக்கப்பட்டது. இன்றுள்ள எருசலேமில் பழைய எருசலேம், புதிய எருசலேம் என்ற இரண்டு பகுதிகள் உள்ளன. ஜனத்தொகை சுமார் 5,44,000.

**பழைய எருசலேம்**

முதலாவது பழைய எருசலேமுக்குள் போவோம். பழைய எருசலேமை சுற்றியுள்ள இந்த கோட்டை சுவர் 4018 மீட்டர் நீளம். இதன் உயரம் சுமார் 12 மீட்டர், கனம் 2.5 மீட்டர். தற்போதுள்ள இந்தக் கோட்டைச் சுவர் சுலைமான் என்ற முஸ்லீம் அரசனால் **(Suleiman the Magnificient)** கி.பி.1542ல் கட்டப்பட்டது. இந்தக் கோட்டைச் சுவற்றை சுற்றிலும் 34 கோபுரங்களும், 8 வாசல்களும் உள்ளன.

1. *தமஸ்கு வாசல்*

(தமஸ்கு பட்டணத்திற்கு செல்லும் பாதை ஆரம்பமான இடம்).

*2. புது வாசல்*

*3. யோப்பா வாசல்*

(யோப்பா பட்டணத்திற்கு செல்லும் பாதை ஆரம் பமாகும் இடம்)

*4. சீயோன் வாசல்*

(சீயோன் மலைக்குச் செல்லும் வழி)

*5. குப்பை மேட்டு வாசல்*

(புலம்பல் சுவர் பக்கமுள்ளது)

*6. தங்க வாசல்*

எசேக்கியேல் 44:1-4ல் இது கிழக்கு வாசல் என்றும், அதிபதிக்கே உரியது என்றும் கூறப்பட்டுள் ளது. இந்த வாசல் பல நூற்றாண்டுகளாக அடைக்கப் பட்டுள்ளது. மேசியா வரும்போது இந்த வாசல் வழியாகத்தான் தேவாலயத்திற்கு செல்வார் என நம்புகின்றனர்.

*7. சிங்க வாசல், ஆட்டு வாசல், ஸ்தேவான் வாசல்*

இந்த வாசல் முன்பு தான் ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டான். சிங்கங்களின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளதால் சிங்க வாசல் என்றும் அழைக்கப்படு கிறது. 1967ல் தேவாலய பகுதியை பிடிக்க இஸ்ரவேல் சேனை இந்த வாசல் வழியாகத் தான் நுழைந்தது. அதுவரையிலும் தேவாலய பகுதி முஸ்லீம்கள் வசம் இருந்தது.

*8. ஏரோது வாசல்*

இந்த வாசல்களை கடந்து பழைய எருசலே முக்குள் போனால் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்த சரித்திர காலத்திற்கு வந்துவிட்டதாக

உணர்வோம். பாதைகளும், கட்டிடங்களும் மிக பழமையானவை. சில இடங்களில் புதுப்பித்து கட்டப் பட்ட கட்டடங்களையும் பார்க்கலாம்.

**தேவாலயம்**

ஸ்தேவான் வாசல் வழியாக பழைய எருசலே முக்குள் நுழைகிறோம். இடது புறம் இருப்பது தேவாலயம் இருந்த இடம். மோரியா மலை என்பதும் இதுவே. இந்த இடத்தில் இருப்பது **Dome of the Rock** என்ற பள்ளிவாசல். இதற்குள் ஆபிரகாம் ஈசாக்கை பலியிட்ட பாறை இருக்கிறது. இந்த மசூதி கி.பி.691ல் அப்துல்மாலிக் என்ற அரசனால் கட்டப் பட்டது. முகம்மது நபி இந்த பாறையிலிருந்து மேலே சென்றதாக முஸ்லீம்கள் நம்புகின்றனர்.

சற்று மேற்கே செல்வோம். இதுதான் புலம்பலின் சுவர் **(Western or Wailing Wall).** தேவாலய பகுதியின் மேற்கு சுவர் ஏரோது ராஜாவினால் கட்டப்பட்டது. கி.பி. 70ல் தேவாலயம் இடிக்கப்பட்டபோது இந்த சுவர் இடிக்கப்படவில்லை. யூதர்கள் இந்த இடத்தில் நின்று “மேசியாவே வாரும்” என்று தினமும் புலம்புகின் றனர். இந்த சுவர் 200 அடி நீளம், 60 அடி உயர முள்ளது. ஒவ்வொரு கல்லும் 16 1/2 அடி நீளம், 13 அடி அகலம் உள்ளது.

**பெதஸ்தா குளம்**

ஸ்தேவான் வாசலுக்குள் நுழைந்தவுடன் வலது புறத்தில் நாம் பார்ப்பது பெதஸ்தா குளம். இந்த இடத்தில்தான் இயேசு 38 வருடம் வியாதியாயிருந்த வனை குணமாக்கினார் (யோ.5:2-15). இன்று இது ஒரு கிணறு அளவிலேயே இருக்கிறதை பார்க்கிறீர்கள்.

பழைய எருசலேமை விட்டு வெளியே வருகி றோம். கிழக்கே காண்பது ஒலிவ மலை. பழைய எருசலேமுக்கும் ஒலிவ மலைக்கும் இடையில் கிதரோன் பள்ளத்தாக்கை பார்க்கிறோம். சுமார் ஒரு கிலோ மீட்டர் இடைவெளி இருக்கும்.

**ஒலிவ மலை**

இயேசு அநேக தடவை இந்த ஒலிவ மலையிலி ருந்து தமது சீஷருக்கு போதனை செய்தார். இந்த மலையின் அடிவாரத்தில் தான் கெத்சமனே தோட்டம் இருக்கிறது. இயேசுவும் சீஷரும் அடிக்கடி ஜெபிக்க சென்ற இடம். (நான் பல தடவை இந்த இடத்திற்கு சென்று ஜெபித்ததுண்டு). இன்றும் ஒலிவ மரங்களை இங்கு காண்கிறோம். ஒலிவ மலையிலிருந்துதான் இயேசு பரமேறிச் சென்றார். அதற்கான ஞாபக சின்னத்தின் பெயர்: **Dome of the Ascension.** இயேசு பரமண்டல ஜெபத்தைக் கற்றுக்கொடுத்த இடமும் இந்த மலையில் இருக்கிறது. அந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள ஆலயத்தின் பெயர் **Church of the Pater Noster.**

இதில் பரமண்டல ஜெபம் 60 மொழிகளில் கல்வெட்டால் எழுதப்பட்டுள்ளது. ஒலிவ மலை அடிவாரத்தில் யூதர்களுடைய கல்லறை தோட்டம் இருக்கிறது. மேசியா ஒலிவ மலையில் இறங்கி '**தங்க வாசல்**' வழியாக தேவாலயத்திற்கு போவார். அப்போது மரித்த பரிசுத்தவான்கள் உயிர்த்து அவருடன் செல்வார்கள். எனவே ஒலிவ மலையிலுள்ள கல்லறை தோட்டத்தில் அடக்கம் பண்ணப்பட்டால் உயிர்த் தெழுதலில் முதல் பங்கு கிடைக்கும் என்று யூதர்கள் நம்புகின்றனர். ஒலிவ மலை அடிவாரத்தில் புதைக்க அதிக பணம் கொடுக்க வேண்டும்.

இப்போது ஒலிவ மலையிலிருந்து மேற்கே பார்க்கிறோம். தேவாலயம் இருந்த இடமும் பழைய எருசலேமும் எதிரே அழகாக தெரிகிறது. ஒலிவ மலையிலிருந்து இறங்கி பழைய எருசலேம் மதில் பக்கமாக தெற்கு நோக்கி நடக்கிறோம். இதோ இது குப்பை மேட்டு வாசல் (நம்ம ஊர் வழக்கப்படி குப்பைகளை இங்கே போட்டு விடாதீர்கள்). இதைக் கடந்து மதில் ஓரமாகவே மேற்கு நோக்கி நடக்கிறோம். இதோ எதிரே தெரிவதுதான் சீயோன் வாசல். பழைய எருசலேமிலிருந்து இந்த வாசல் வழியாக வெளியே வந்தால் சீயோனுக்கு போகலாம். எதிரே தெரியும் உயரமான பகுதிதான் சீயோன்.

**சீயோன்**

நாங்கள் மட்டும்தான் சீயோனுக்கு போவோம் என்று ஒரு கூட்டம் சொல்லிக் கொண்டிருக்கிறது. உங்கள் எல்லோரையும் சீயோனுக்கு அழைத்துச் செல்கிறேன். மகிழ்ச்சி தானே! இந்த சீயோனில் தான் தாவீதின் கல்லறை இருக்கிறது. இயேசு தம் சீஷரோடு பஸ்கா ஆசரித்த மேல்மாடி இங்கேதான் இருக்கிறது. பெந்தெகொஸ்தே என்னும் நாளில் சீஷர்கள் கூடி ஜெபித்தபோது பரிசுத்தாவி ஊற்றப்பட்ட மேல்மாடியும் இதுதான் என்று கூறப்படுகிறது.

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டு சுமார் 2000 வருடம் ஆகிவிட்டதே! நீங்கள் இன்னும் அபிஷேகம் பெறாமலே இஸ்ரவேல் நாட்டை பார்க்க வந்துவிட்டீர்களே! இந்த இடத்தில் கொஞ்சம் ஜெபிப்பீர்களா! ஆவியானவர் உங்கள் மேல் இறங்கட்டும். மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று

கர்த்தர் முன்னுரைத்தாரே! இந்த அனுபவம் ஒரு குறிப்பிட்ட சபைக்கோ, சபைப் பிரிவுக்கோ மட்டும் உரியதல்ல. விசுவாசிகள் எல்லோருக்கும் உரியது. இப்போது பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**சீலோவாம் குளம்**

சீயோனிலிருந்து தென்கிழக்கில் தெரிகிறதே அதுதான் சீலோவாம் குளம். இயேசு குருடனைப் பார்த்து சீலோவாம் குளத்தில் கழுவு என்றார். கீழ்ப்படிந்து சென்ற அவன் பார்வையடைந்தவனாய் திரும்பி வந்தான். மெய் தேவன் யார் என்று தெரியாமல் ஆவிக்குரிய குருடராயிருக்கிற மக்கள் கண்களை இயேசு திறக்க ஜெபிப்போம்.

**கல்வாரி**

தமஸ்கு வாசலிலிருந்து வடக்கு நோக்கி நடக்கி றோம். எதிரே எருசலேம் பஸ் நிலையம் இருக்கிறது. பஸ் நிலையத்திற்கு மேலே பாருங்கள். ஒரு சிறிய குன்று தெரிகிறது. மண்டை ஓடு போல தோற்ற மளிக்கும் இது தான் கொல்கதா அல்லது கல்வாரி என்று அழைக்கப்படுவது. நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது இந்த இடம்தான் என்று கூறப்படுகிறது. இதற்கு அருகாமை யிலுள்ள இந்த குகை போன்ற கல்லறை தான் இயேசு கிறிஸ்துவின் சரீரம் வைக்கப்பட்டிருந்ததாக கூறப் படுகிறது.

இந்த கல்லறைக்குள்ளே எழுதியிருப்பது “**He is not here, he is risen**” “அவர் இங்கே இல்லை, உயிர்த்தெழுந்தார்”. புகழ்பெற்ற அநேகருடைய

கல்லறைகளை உலகில் பல நாடுகளில் பார்த்திருக் கிறேன். ஆனால் இயேசுகிறிஸ்துவின் கல்லறை ஒன்றே திறந்த கல்லறையாக தனிச்சிறப்புடன் விளங்கு கிறது. இந்தக் கல்லறைக்குள் போய் பல தடவை இயேசுவே நீர் உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிறீர் என்பதை எங்கள் மக்களுக்கு நிரூபிக்க உதவி செய்யும் என்று ஜெபித்திருக்கிறேன்

எருசலேமையும் அதன் சுற்றுப் பகுதிகளையும் பார்த்தோம். இப்போது எருசலேமிலிருந்து தெற்கு நோக்கி பயணம் செய்வோம். வேதாகம நாட்களில் இஸ்ரவேல் நாடு மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டி ருந்தது. எருசலேமை சுற்றியுள்ள தென்பகுதி யூதேயா, மத்திய பகுதி சமாரியா, வட பகுதி கலிலேயா என்று அழைக்கப்பட்டது. இன்றும் இதே பிரிவுகளை காணலாம்.

**பெத்லகேம்**

எருசலேமிலிருந்து தெற்கே 6 கி.மீ. தூரத்தில் இருக்கிறது இயேசு பிறந்த ஊர். ஆதி.35:19ல் முதன் முதலாக இந்த ஊர் குறிக்கப்பட்டுள்ளது. எருசேலமி லிருந்து பெத்லகேமுக்கு போகும் வழியில், பெத்லகே முக்கு சற்று முன்னால் ராகேலின் கல்லறை இருக்கிறது. யாக்கோபின் மனைவியாகிய ராகேல் இந்த இடத்தில் வந்தபோது பென்யமீனைப் பெற்று மரித்தாள். யாக்கோபு இந்த இடத்தில் ஒரு தூணை நிறுத்தினான். இன்றும் அந்த கல்லறையை காணலாம் (ஆதி.35: 16-20).

'பெத்லகேம்' என்றால் 'அப்பத்தின் வீடு' என்று பொருள். நகோமி, ரூத், போவாஸ் வாழ்ந்த ஊர் (ரூத் 1:19-22). தாவீதின் மூதாதையர் வாழ்ந்த ஊர். இங்கே

தான் சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினான் (1 சாமு.16:4, 11-13). இயேசு பிறந்த இடத்தில் ரோமப் பேரரசன் கான்ஸ்டன்டைன் கி.பி. 330ல் ஒரு ஆலயத்தைக் கட்டினான். உலகத்திலேயே மிகப்பழமையான ஆலயம் இதுவே. இந்த ஆலயத்திற்கு பெயர்: **The Church of the Nativity.** பெத்லகேமுக்கு சற்று கிழக்கே இருப்பது மேய்ப்பரின் வயல். இங்கேதான் தேவதூதன் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை மேய்ப்பருக்கு அறிவித்தான்.

### எபிரோன்

பெத்லகேமை கடந்து தெற்கே பயணம் செய்வோம். எருசலேமிலிருந்து தெற்கே சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்தில் எபிரோன் இருக்கிறது (பெத்லகேமிலிருந்து 24 கி.மீ). இதற்கு கீரியாத் அர்பா என்ற பெயரும் இருந்தது. காலேபுக்கு எபிரோன் சுதந்தரமாக கொடுக்கப்பட்டது (யோசுவா 14:12-15). மம்ரேயின் சமபூமி என்பதும் இதுதான் (ஆதி.13:18). ஆபிரகாம் காலத்திற்கு பின்தான் இது ஒரு பெரிய ஊராயிற்று. இது கி.மு.1700ல் கட்டப்பட்டது (எண்.13:22).

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் வாழ்ந்த ஊர் இதுதான். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு மற்றும் இவர்களுடைய மனைவிகளின் கல்லறையாகிய மக்பேலா குகை இங்கேதான் இருக்கிறது (ஆதி.23:1-20). தாவீது எபிரோனை தலைநகராகக் கொண்டு 7 1/2 ஆண்டுகள் ஆட்சி செய்தான் (2 சாமு.2:11; 1 இராஜா.2:11). இன்றுள்ள மக்கள் தொகை 40,000 பேர். அரேபியர் அதிகம் குடியிருக்கின்றனர்.

### பெயெர்செபா

எபிரோனிலிருந்து தென் மேற்கில் சுமார் 30 கி.மீ. தூரத்தில் இந்த இடம் இருக்கிறது. இது அன்று போல் இன்றும் வனாந்தரமாகவேயிருக்கிறது. 'பெயெர் செபா' என்ற வார்த்தையின் பொருள் 'பிரமாணத்தின் ஊற்று' (ஆதி.21:31). இஸ்ரவேல் நாட்டின் தெற்கு எல்லை என்று இதைக் கூறலாம்.

மறுபடியும் நாம் எருசலேமுக்குத் திரும்புவோம்.

### பெத்தானியா

எருசலேமின் கிழக்குப் பகுதியில் ஒலிவ மலை இருக்கிறது. ஒலிவ மலையின் அடிவாரத்தில் எருசலே மிலிருந்து எரிகோவுக்கு போகும் பாதை இருக்கிறது. எருசேலமிலிருந்து இந்த பாதையில் சுமார் 3 கி.மீ. சென்றால் பெத்தானியா வந்து சேருவோம். மார்த் தாள், மரியாள், லாசரு வாழ்ந்த ஊர் இது. இந்த ஊருக்கு இப்போது '*எல் அசரியா*' என்று பெயர். இங்கே லாசருவை இயேசு உயிரோடு எழுப்பின கல்லறை இருக்கிறது.

### எரிகோ

பெத்தானியாவை கடந்து கிழக்கு நோக்கிச் செல்லும்போது யூதேயாவின் வனாந்தரத்திற்கு வருகி றோம். வழியில் நல்ல சமாரியன் சத்திரம் என்ற ஓர் இடம் வருகிறது. அதைக் கடந்து எரிகோ வந்து சேரு கிறோம். எருசலேமிலிருந்து கிழக்கில் சுமார் 27 கி.மீ. தூரத்தில் எரிகோ இருக்கிறது. எரிகோ உலகத்தி லேயே மிக பழமையான ஊர்களில் ஒன்று. ராகாப் வாழ்ந்த ஊர். யோசுவாவின் தலைமையில் இஸ்ர வேலர் யோர்தானைக் கடந்துவந்து இந்த பட்டணத்தை

7 நாட்களில் 13 தடவை சுற்றி வந்தபோது இதன் அலங்கங்கள் இடிந்து விழுந்தன (யோசுவா 6:10-21). இங்கே அரேபியர் அதிகம் குடியிருக்கின்றனர்.

எரிகோவிற்கு மேற்கே இயேசு சோதிக்கப்பட்ட மலை இருக்கிறது. இதன் பெயர் Mount of Temptation. எரிகோவிற்கு அருகில்தான் இயேசு ஞானஸ்நானம் பெற்ற இடம் இருக்கிறது. யோர்தான் நதி சவக்கடலில் கலக்கும் இடமும் இதன் அருகில்தான் இருக்கிறது.

**பெத்தேல்**

எரிகோவிலிருந்து வட மேற்கில் சுமார் 20 கி.மீ. தூரத்தில் பெத்தேல் இருக்கிறது (எருசலேமிலிருந்து வடக்கே 18 கி.மீ. தூரம்) இந்த இடத்தில்தான் யாக்கோபு தேவ தரிசனம் கண்டான் (ஆதி.28:11-22). 'பெத்தேல்' என்றால் 'தேவனுடைய வீடு' என்று பொருள். ஆபிரகாம் இங்கே பலிபீடம் கட்டி கர்த்தரை தொழுது கொண்டான் (ஆதி.12:8).

**சீகேம்**

பெத்தேலிலிருந்து வடக்கே சுமார் 30 கி.மீ. தூரம் சென்றால் சீகேம் வந்து சேருவோம் (எருசலேமிலிருந்து வடக்கே சுமார் 40 கி.மீ. தூரம்) ஆபிரகாம் முதல் பலிபீடத்தைக் கட்டின இடம் (12:6,7). யோசேப்பு தன் சகோதரரைத் தேடிச் சென்ற இடம் (ஆதி.37: 13,14). தற்போது இங்கே அதிகமாக அரேபியர் குடியிருக்கின்றனர். இந்த ஊருக்கு தற்கால பெயர் **நெப்லஸ்.**

**சீகார்**

சீகேமிற்கு கிழக்கே சீகார் இருக்கிறது. இதன் நவீன கால பெயர் **அஸ்கார்.** யாக்கோபின் கிணறு

இங்கேதான் இருக்கிறது. இயேசு சமாரிய பெண்ணை சந்தித்த இடம் இதுதான் (யோ.4:3-42). சீகார் ஏபால் மலையின் அடிவாரத்தில் இருக்கிறது.

ஏபால், கெரிசீம் மலைகள் இந்த பகுதியில்தான் இருக்கின்றன (உபா.11:29).

**நாயீன்**

சமாரியாவைக் கடந்து வடக்கு நோக்கி பிரயாணம் செய்யும்போது மெகிதோ சமபூமிக்கு வருகிறோம். அதைக் கடந்து செல்லும்போது நாயீன் என்ற ஊருக்கு வருகிறோம். இயேசு மரித்த வாலிபனை உயிரோடு எழுப்பின ஊர் இதுதான் (லூக்.7:11-18). இதற்கு **நாயீம்** என்பது நவீன கால பெயர்.

**நாசரேத்து**

நாயீன் ஊரைக் கடந்தவுடன் நாசரேத் வருகிறது. நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தனது 30 வயது வரையிலும் வாழ்ந்த ஊர் (மத்.2:19-23; லூக்.2:51,52).

**கானாவூர்**

நாசரேத்திலிருந்து வடகிழக்கில் சுமார் 6 கி.மீ. தூரத்தில் இருப்பது கானாவூர். இயேசு தண்ணீரை திராட்சரசமாக மாற்றிய தமது முதலாம் அற்புதத்தை செய்த ஊர் (யோ 2:1-11). இப்போது இந்த ஊர் பெயர் கபர்கன்னா.

**கலிலேயா கடல்**

கானாவூரிலிருந்து கீழ்திசை நோக்கி சென்றால் சுமார் 15 கி.மீ. தூரத்திலிருப்பது கலிலேயா கடல். இது 22 கி.மீ. நீளம், 11 கி.மீ. அகலமுடையது. சுற்றளவு சுமார் 50 கி.மீ. கடல் மட்டத்திற்கு கீழே 700 அடி

தாழ்ந்துள்ளது. ஆழம் சுமார் 200 அடி. கடல் என்று அழைக்கப்பட்டாலும் நல்ல குடிதண்ணீர் நிரம்பியது. இயேசுகிறிஸ்துவின் ஊழியம் இந்த வட்டாரத்தில் அதிகம் நடைபெற்றது இதற்கு பல பெயர்கள் உண்டு.

1. கின்னரேத் கடல் (எண்.34:1)
2. கெனேசரேத்து கடல் (லூக்.5:1)
3. திபேரியாக் கடல் (யோ.6:1)
4. கலிலேயா கடல் (மத்.4:18)
5. தற்போதைய பெயர் கின்னரெட் ஏரி.

ஏரோது அந்திபாஸ் கி.பி.21ல் கலிலேயாக் கடலில் மேற்குக் கரையில் திபேரியா என்ற பட்ட ணத்தைக் கட்டினான். அதனால் திபேரியாக் கடல் என்ற பெயர் வந்தது. டைபீரியஸ் என்ற இந்த பட்டணத்திற்கு வடக்கே மூன்று மைல் தூரத்தில் இருந்தது மக்தலா (மத்.15:39). மகதலேனா மரியாளின் சொந்த ஊர் இதுவே (லூக்.8:2). கடலை ஒட்டி வடக்கே சென்றால் மேற்கே தெரியும் சிறிய குன்றுதான் இயேசு மலைப்பிரசங்கம் செய்த இடம்.

**கப்பர்நகூம்**

கலிலேயாக் கடலில் வடக்கு எல்லையில் அமைந் திருப்பது கப்பர்நகூம். இயேசு இந்த பட்டணத்திற்கு அடிக்கடி வந்து தங்கினார். அநேக அற்புதங்கள் செய்தார். இது இயேசுவின் பட்டணம் என்று அழைக்கப்பட்டது (மத்.9:1).

ஆனாலும் இந்த பட்டணத்தார் மனந்திரும்பாத படியினால், “வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர் நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்” என்று

இயேசு கூறினார் (மத்.11: 23,24). அதன்படியே இன்று வரை இங்கு யாருமே குடியிருக்கவில்லை. சிதைந்த நிலையிலுள்ள பல வீடுகளையும், ஜெப ஆலயத்தையும் காணலாம். ஐந்து அப்பம் இரண்டு மீனைக் கொண்டு இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த இடம் இதன் அருகில் இருக்கிறது. பேதுருவின் வீடு இங்கே இருந்தது.

**யோர்தான் நதி**

எர்மோன் மலையடிவாரத்திலிருந்து உற்பத்தியாகி கலிலேயாக் கடலில் கலந்து, கலிலேயாக் கடலிலிருந்து தெற்கு நோக்கி பாய்ந்து சவக்கடலில் சேர்கிறது. கலிலேயாக் கடலிலிருந்து சவக்கடல் வரை நேர்கோடு போட்டால் 104 கி.மீ. தான் வரும். ஆனால் வளைந்து வளைந்து செல்வதால் இதன் நீளம் 320 கி.மீ. கடல் மட்டத்திற்கு கீழே 1300 அடி தாழ்வாக ஓடுகிறது. 100 முதல் 200 அடி அகலமுள்ள சிறிய நதி தான். ஆனாலும் அதிகமாக அறியப்பட்ட நதி, அநேக அற்புதங்களை, சரித்திர நிகழ்ச்சிகளை கண்ட நதி. இயேசு ஞானஸ்நானம் பெற்ற நதி. இஸ்ரவேல் நாட்டின் கீழ் எல்லையாக இது அமைந்துள்ளது. இந்த நதிக்கு கிழக்கே ஜோர்டான் நாடு இருக்கிறது.

**சவக் கடல்**

யோர்தான் நதியைத் தொடர்ந்து தெற்கு நோக்கி சென்றால் சவக்கடலுக்கு வந்து சேர்கிறோம். இது சுமார் 80 கி.மீ. நீளம், 16 கி.மீ. அகலமுள்ளது. யோர்தான் நதி இதில் பாய்ந்தாலும் தண்ணீர் எங்கும் வெளியே போவதில்லை. எனவே சவக்கடல் என அழைக்கப்

படுகிறது. கடல் மட்டத்திற்கு கீழே 1300 அடி தாழ்வாக உள்ளது. உலகத்திலேயே தாழ்வான பகுதி இதுதான்.

வெப்பத்தினால் நீர் ஆவியாகிறதை தவிர வேறு தண்ணீர் போக்கு இல்லாததால் கடல் தண்ணீரைப் போல பத்து மடங்கு உப்புச் சத்துள்ளது. இந்த சவக் கடலின் தண்ணீர் கடலின் தண்ணீரைப் போல ஐந்து மடங்கு அடர்த்தியுள்ளது. யாரும் இதில் மூழ்க முடியாது. சோடியம், குளோரின், சல்பர், பொட்டாசியம், கால்சியம், மக்னீசியம் ஆகிய தாது உப்புகள் இதில் அதிகம் கிடைப்பதால் இஸ்ரவேல் நாட்டிற்கு மிகுந்த லாபகரமான கடலாக இருக்கிறது.

*தற்போதுள்ள இஸ்ரவேல் நாட்டைப் பற்றிய சில புள்ளி விபரங்கள்:*

- மொத்த பரப்பளவு : 28251 ச.கிலோ மீட்டர்
- மக்கள் தொகை : 54,38,000
- யூதர்கள் : 81.8%

  (சுமார் 102 தேசங்களிலிருந்து குடியேறியுள்ளனர். 1990-92 ஆண்டுகளில் மட்டும் சுமார் 4,50,000 யூதர்கள் குடியேறினர். இவர்களில் பெரும்பான்மையோர் ரஷ்யாவிலிருந்து வந்தனர்).
- முஸ்லீம்கள் : 14.5%
- கிறிஸ்தவர்கள் : 2.34%
- கல்வி கற்றவர்கள் : 92%
- தேசிய மொழி : எபிரேயம், அரபி
- தலைநகர் : எருசலேம்


✦ மக்கள் தொகை : 5,44,000

✦ வருட வருமானம் : சுமார் 10,000 டாலர் (4,00,000 ரூபாய்).

இஸ்ரவேல் நாட்டை ஓரளவு சுற்றிப் பார்த்து விட்டோம். இப்போது சவக்கடல் பக்கம் வந்துவிட்டோம். எனவே இதோ கிழக்கே தெரிகிறதே இந்த ஜோர்டான் நாடு. அதையும் ஒரு சுற்று சுற்றிவிட்டு வருவோம்.



# ஜோர்டான்



இஸ்ரவேல் நாட்டின் கிழக்கு எல்லையாக அமைந்திருப்பது யோர்தான் நதி, சவக்கடல். அதன் கிழக்கே அமைந்திருப்பதுதான் ஜோர்டான் நாடு. கி.பி.1946ல் இந்த நாடு பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்று தனி நாடானது. அதற்கு முன்பு கி.பி.1918 வரை துருக்கிய சாம்ராஜ்யத்தின் பகுதியாக இருந்தது. 1950ல் சமாரியா, யூதேயாவின் பகுதியாக விரிவாக்கப்பட்டது.

ஜோர்டான் நாட்டின் எல்லைகள் வடக்கே சிரியா, வட கிழக்கில் ஈராக், கிழக்கிலும் தெற்கிலும் சவூதி அரேபியா, மேற்கே இஸ்ரவேல் நாடு. இந்த சிறிய நாட்டின் மொத்த பரப்பளவு 85,000 சதுர கிலோ மீட்டர். 1967ல் நடந்த 6 நாள் யுத்தத்தில் யோர்தான் நதிக்கு மேற்கே இருந்த பகுதியை இஸ்ரவேல் பிடித்துக் கொண்டது. இந்த நாட்டின் தென்பகுதியில் அக்குபா என்ற துறைமுக பட்டணம் இருக்கிறது. இது அக்குபா வளைகுடாவிலிருக்கிறது. இந்த நாட்டின் ஒரே துறைமுகம் இதுதான்.

இந்த நாட்டின் ஜனத்தொகை 38,13,000 பேர். தலைநகர் அம்மான். இந்த நாட்டின் பணம் தினார். வேதாகம நாட்களில் கூறப்பட்டுள்ள ஏதோம், மோவாப், அம்மோன், கீலேயாத் என்ற பகுதிகள் இங்கேதான் இருந்தன. இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து

கானானை நோக்கி பயணம் செய்துவந்தபோது ஏதோம் மக்கள் தங்கள் நாட்டு வழியே இஸ்ரவேலர் செல்லக்கூடாது என தடுத்தனர் (எண்.20:14-21; 21:4). ஏதோமியர் ஏசாவின் சந்ததியினர். மோவாபியரும் இஸ்ரவேலரை தடுத்தனர். எனவே இஸ்ரவேலர் சுற்றி வளைந்து சென்றனர் (உபா.2:9-11; நியா.11:17,18).

மோவாப், அம்மோன், லோத்துவிற்கு அவன் பெண் பிள்ளைகள்மூலம் பிறந்த முறைகேடான மக்கள் (ஆதி.19:30-38) பஞ்சம் உண்டானபோது நகோமி தன் கணவனுடன் சென்ற இடம் இந்த மோவாப்தான் (ரூத் 1:1-4). யோசுவா, அம்மோன், பாசானின் அரசனான ஓக் போன்றவர்களை முறியடித்து இஸ்ரவேலரை நடத்திச் சென்றான் (எண்.21:21-35; உபா.2:2; 3-11; நியா.11:19-23). தேசம் பங்கிடப்பட்டபோது இந்தப் பகுதிகள் ரூபன், காத், மனாசேயின் பாதி கோத்திரம் ஆகிய 2 1/2 கோத்திரங்களுக்கு கொடுக்கப்பட்டது (உபா.3:12-20; யோசு.1:12-18; 22).

### அம்மான்

ஜோர்டான் நாட்டின் தலைநகர் அம்மான். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அம்மோன் புத்திரரின் தலைநகரமாக இருந்ததும் இதுவே. இங்கே அரசர் களாயிருந்த நாகாஸ், ஆனூன் என்பவர்களைப்பற்றி 2 சாமு.10ல் பார்க்கிறோம். இதன் மக்கள் தொகை 12,00,000.

### அக்குபா

அக்குபா வளைகுடா பகுதியில் அமைந்துள்ள பட்டணம். செங்கடலின் ஒரு பகுதியே இந்த அக்குபா

வளைகுடா. சேபாவின் ராணி இந்த துறைமுகம் வழியாகவே சாலொமோனை சந்திக்க வந்தாள் என்று கூறப்படுகிறது (1 இரா.10ம் அதிகாரம்).

**ஜெராஷ்**

யோர்தான் நதிக்கு கிழக்கேயுள்ள பட்டணங்களில் ஒன்று ஜெராஷ். இதுவே புதிய ஏற்பாட்டு காலத்தில் தெக்கப்போலி என்று அழைக்கப்பட்ட பட்டணங்களில் ஒன்று. இயேசுவைப்பற்றி இப்பட்டணத்தார் நன்கு அறிந்திருந்தனர் (மத்.4:25; மாற்கு 7:31). இந்த ஊருக்கு சில மைல் தெற்கே யாப்போக்கு நதி இருக்கிறது. யாக்கோபு இரவு முழுவதும் போராடி ஜெபித்த இடம் இதுவே (ஆதி.32:22-31). எமோரியரின் வடக்கு எல்லையாக யாப்போக்கு நதி இருந்ததாக காண்கிறோம் (எண்.21:21-24).

**நேபோ மலை**

அம்மானுக்கு தென்மேற்கில் சுமார் 25 கி.மீ. தூரத்திலிருக்கிறது. சவக்கடலுக்கு கிழக்கே இருந்தது மோவாபிய நாடு. மோசே இந்த நேபோ மலையிலிருந்துதான் கானான் நாட்டைப் பார்த்தான். பின்பு மரித்து இதன் பள்ளத்தாக்கில் கர்த்தரால் அடக்கம் பண்ணப்பட்டான் (எண்3:47; உபா.32:49-52; 34:1-8). பிஸ்கா மலையின் கொடுமுடிதான் நேபோ சிகரம். இந்த மலையிலிருந்து இஸ்ரவேல் நாட்டை தெளிவாக பார்க்க முடியும்.

**பெனுவேல்**

யோர்தான் நதிக்கு கிழக்கே, யாப்போக்கு நதிக்கு வடக்கே பெனியேல் இருந்தது. யாக்கோபு தேவனை

முகமுகமாய் சந்தித்த இடம் (ஆதி.32:21-31). யெரோபெயாம் இதே இடத்தில் பெனுவேல் என்ற அரணிப்பான ஊரைக் கட்டினான் (1 இரா.12:25).

### பெட்ரா

அம்மானிலிருந்து தெற்கே சுமார் 270 கி.மீ. தூரத்தில் இந்த பட்டணம் இருக்கிறது. சவக்கடலின் தென் எல்லைக்கும் அக்குபா வளைகுடாவிற்கும் மத்தியில் இருப்பது பெட்ரா. பெட்ராவிற்கு சற்று வடக்கில் இருக்கும் இடத்திற்கு 'அயின்முசா' என்று பெயர். மோசே கன்மலையை அடித்தபோது தண்ணீர் புறப்பட்டு வந்த இடம் இது என கூறப்படுகிறது (எண்.20:8-13). இன்றும் இந்த இடத்தில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஏதோமின் மலைகளால் சூழப்பட்ட ஊர் இந்த பெட்ரா. இந்த மலைகளில் ஒன்று ஓர் என்ற மலை. இதில்தான் ஆரோன் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான் (எண்.20:23-29). ஏசா இந்த வட்டாரத்தில் குடியிருந்து பட்டணங்களைக் கட்டினான். ஏசாயா 16:1ல் கூறப்பட்டுள்ள ஏதோமின் பட்டணம் சேலா என்பதுதான் பெட்ரா என்று கூறப்படுகிறது.

இந்த பட்டணத்தில் அழகிய பள்ளத்தாக்குகள் உள்ளன. இருபுறமும் 200 முதல் 300 அடி உயரமுள்ள சிவப்பு மலை வெடிப்புகளுக்கு மத்தியில் பாதைகள் செல்கின்றன. இந்த பாதை சில இடத்தில் 8 அடி அகலம் மட்டுமே உள்ளது. சுமார் 3 கி.மீ. நீளமுள்ள இந்த பள்ளத்தாக்கு மிக அழகானது.


கி.பி.106ல் ரோமர்கள் இந்த பட்டணத்தை பிடித்து பல கட்டிடங்களை கட்டினர். பல நூற்றாண்டு களாக இந்த பட்டணம் வெளி உலகத்திற்கு தெரியாமல் இருந்தது. கி.பி.1812ல் ஜாண் பர்கார்ட் என்பவர் இந்த இடத்திற்கு சென்று இதைக்குறித்து வெளி உலகிற்கு எழுதினார்.

**சுக்கோத்**

யோர்தான் நதிக்கு கிழக்கே சுமார் 6 கி.மீ. தூரத் திலும், யாப்போக்கு நதிக்கு வடக்கே சுமார் 2 கி.மீ. தூரத்திலும் ஒரு மேடான பகுதியில் அமைந்துள்ள ஊர் சுக்கோத். பதான் அராமிலிருந்து வந்து தன் சகோதரன் ஏசாவுடன் சமாதானமான பின்பு யாக்கோபு இங்கே ஒரு வீட்டைக் கட்டி குடியிருந்தான் (ஆதி. 33:17; யோசு.13:27). தன் மிருகங்களுக்கு கொட்டாரங் களைப் போட்டான். 'சுக்கோத்' என்றால் 'கொட்டாரம்' என்று பொருள். சங்.60:6; 108:7ல் கூறப்பட்டுள்ள இடம் இதுவே. ஆனால் இன்னொரு சுக்கோத் இருந்தது. இஸ்ரவேலர் (யாத்.12:37; 13:20; எண்.33:5). அந்த சுக்கோத் வேறு. இந்த சுக்கோத் வேறு. போதுமான அளவிற்கு உங்களை குழப்பிவிட்டேன் என எண்ணு கிறேன்.

*ஜோர்டானைப் பற்றிய சில புள்ளி விபரங்கள்:*

- ☆ கல்வி கற்றோர் : 80%,
- ☆ தேசிய மொழி : அரபி,
- ☆ முஸ்லீம் : 94%
- ☆ கிறிஸ்தவர் : 4.67%,
- ☆ வருட வருமானம் : சுமார் 1,300 டாலர் (ரூ.52,000).



# எகிப்து



இஸ்ரவேல் நாட்டின் தென் மேற்கின் எல்லை யாய் அமைந்திருப்பது எகிப்து. டெல்அவிவிலிருந்து ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே எகிப்தின் தலை நகரான கெய்ரோவிற்கு விமானம்மூலம் வந்துவிடலாம். நமது பிளைட் எக்ளிசியா 777 ஆயத்தமாயிருக்கிறது. புறப்படுவோம்.

எகிப்தின் சரித்திரத்தைப் பற்றி கொஞ்சம் அறிந்து கொள்வோமா? உங்களில் சிலருக்கு சரித்திரம் என்ற உடனேயே எரிச்சல் வரலாம். கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள். எகிப்தின் தலைநகரான கெய்ரோ போய் சேர அரை மணி நேரம் இருக்கிறது. அதற்குள் சரித்திர பாடத்தை முடித்துவிடுவோம். எகிப்து சுமார் 10 லட்சம் கி.மீ. பரப்பளவுள்ளது. 96% பாலைவனமே. 3% நைல் நதி பகுதி இருக்கிறது. இதில்தான் மக்கள் வசிக்கின்றனர். மொத்த ஜனத் தொகை சுமார் 6,04,70,000. ஒரு லட்சம் மக்கள் தொகையுள்ள நகரங்கள் 13.

***கி.மு.3000–2700 – ஆதி ராஜ்யம்* (Old Kingdom)**

முதல் இரண்டு ஆதி அரச பரம்பரையினரும் **(Dynasty 1,2)** மெம்பிஸ் என்ற பட்டணத்தை தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். வேதாகம நாட்களில் இதற்கு நோப் என்று பெயர் (ஏசா.19:13; எரே.2:16; 46:14,19; எசே.30:13,16).

**கி.மு.2700-2200 - பழைய ராஜ்ய ஆட்சிக்காலம்**

இந்த காலத்தில் 3-6 அரச வம்சத்தினர் ஆட்சி செய்தனர். இந்த காலத்தில்தான் உலகப் புகழ் வாய்ந்த பிரமிடுகள் கட்டப்பட்டன.

கி.மு்.2200-2000 (7-10 அரச வம்சத்தினர் ஆட்சி)

**கி.மு.2000-1800 - மத்திய ராஜ்யம் (Middle Kingdom)**

11,12 அரச வம்சத்தினரின் ஆட்சி. இந்தக் காலத்தில் தலைநகரம் 'தேபீஸ்'க்கு மாற்றப்பட்டது. வேதாகம நாட்களில் இதற்கு 'நோ' என்று பெயர் (எரே. 46:25; எசேக்.30:14-16; நாகூம் 3:8). கல்லறைகளெல்லாம் சிற்ப வேலைகளால் அலங்கரிக்கப்பட்ட காலம் இதுவே.

கி.மு.1800-1600, 13-17 அரச பரம்பரையினரின் ஆட்சி காலம் (1674-1567)ல் ஹைக்சோஸ் ஆகிய அரசர்கள் ஆண்டனர்.

**கி.மு.1600-1100 - புதிய ராஜ்யம் (New Kingdom)**

18-20 அரச பரம்பரையினர் ஆட்சி செய்த காலம் எகிப்து மிக வல்லமையோடும், செழிப்போடும் இருந்த காலம் இதுதான். இந்த கால கட்டத்தில்தான் இஸ்ரவேலர் எகிப்திலிருந்ததும் எகிப்தைவிட்டு யாத்திரை செய்ததும்.

21-30 அரச பரம்பரையினரின் ஆட்சி. 22ம் பரம்பரை ஆட்சி காலத்தில் சீஷாக் என்ற அரசன் ஆட்சி செய்தான் (1 இரா.11:40; 14:25-27; 2 நாளா.

12:2-12; 26ம் பரம்பரை ஆட்சி காலத்தில் பார்வோன் நேகோ அரசாண்டான். 2 இரா.23:28-30; 33-35; 2 நாளா.35:20-24; 36:4; எரே.46:2).

| | |
|---|---|
| கி.மு.525-332 - | பெர்சியர் ஆட்சி. |
| கி.மு.300-30 - | தாலமியர் ஆட்சி காலம். |
| கி.மு.332-323 - | மகா அலக்ஸாண்டர் ஆட்சி. |
| கி.மு.304-51 - | 1-12 பரம்பரை தாலமி ஆட்சி. |
| கி.மு.51-30 - | கிளியோபட்ரா ஆட்சி. |
| கி.மு.30-கி.பி.392 - | ரோமர் (பைஸான்டைன் ஆட்சி) |
| கி.பி.600 - | எகிப்தை அரேபியர் வெற்றி காணல். |
| கி.பி.1250-1517 - | மாமலூக் ஆட்சி காலம். |
| கி.பி.1517-1800 - | ஆட்டமென் - துருக்கியர் ஆட்சி. |
| கி.பி.1805 - | முகமது அலி கவர்னராக நியமிக்கப்படல். |

இதற்குப்பின்பு எகிப்து நவீன காலத்திற்குள் வருகிறது.

| | |
|---|---|
| கி.பி.1882-1936 - | பிரிட்டிஷார் எகிப்தை ஆட்சி செய்தல். |
| கி.பி.1952 - | பாரூக் அரசனின் ஆட்சி. |

இத்துடன் அரச பரம்பரையினர் ஆட்சி முடிவிற்கு வந்தது.

| | |
|---|---|
| கி.பி.1953 - | எகிப்து சுதந்திரமடைதல். |
| கி.பி.1954 - | ஐக்கிய அரபு குடியரசின் ஜனாபதியாக காமல் அப்துல் நாசர் பதவியேற்றல். |

கி.பி.1956 - சூயஸ் கால்வாய் தேசிய மயமாக்கப்பட்டது.

**மிஸ்ராயீம்**

பண்டைகால எகிப்து மிஸ்ராயீம் என்று அழைக்கப்பட்டது (ஆதி.10:6,13; 1 நாளா.1:8-11). ஆதி காலம் முதல், எகிப்து பல்வேறு தீர்க்கதரிசிகளாலும் குறிப்பிடப்பட்ட நாடு என்பது பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது நன்கு புரியும்.

**ஆபிரகாம்**

பஞ்சம் வந்தபோது ஆபிரகாம் எகிப்திற்கு சென்றதாகப் பார்க்கிறோம். (ஆதி.12:10-20)

**யோசேப்பு**

ஆதி.37:36 - யோசேப்பு போத்திபார் வீட்டில் அடிமையாக விற்கப்பட்டான் (ஆதி.39:1-20). அவன் அங்கே சிறையில் அடைக்கப்பட்டதையும் பின்பு எகிப்தின் பிரதம மந்திரியாக உயர்த்தப்பட்டதையும் ஆதி.41-45 அதிகாரங்களில் காண்கிறோம்.

யாக்கோபும் அவன் குடும்பமும் எகிப்தில் போய் தங்கினர். 17 ஆண்டுகள் அவன் நைல் நதியின் டெல்டா பகுதியில் (கோசேன்) வாழ்ந்தான்.

**மோசே**

2ம் ராம்சே ஆட்சி காலத்தில் மோசே எகிப்தில் பிறந்தான். பின்பு இஸ்ரவேலரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி நடத்திச் சென்றான்.

**இயேசு**

தேவதூதனால் எச்சரிக்கப்பட்டு யோசேப்பும் மரியாளும் இயேசுவாகிய குழந்தையை எகிப்திற்கு

எடுத்துச்சென்று பாதுகாத்தனர் (மத்.2:13-15; ஓசியா 11:1). இவர்கள் வாழ்ந்ததாக கூறப்படும் இடம் பழைய கெய்ரோவிலிருக்கிறது. இந்த இடத்தில் ஒரு ஆலயம் 5ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

கெய்ரோ வந்துவிட்டோம். சரித்திரம் முடிந்தது. இப்போது எகிப்து நாட்டை சுற்றிப் பார்க்கப் போகிறோம்.

### மெம்பிஸ்

கெய்ரோவிற்கு தெற்கே 22கி.மீ. தூரத்திலிருக்கிறது. இதுதான் பண்டைகால எகிப்தின் தலைநகரம் இருந்த இடம் (ஏசா.19:13; எரே.2:16). இப்போது இது தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்யும் இடமாக இருக்கிறது.

### சக்காரா

ஜோசர் என்ற அரசனின் கல்லறை. கி.மு.2700க்கு முன் 37 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பிரமிட் கோபுரம். இதற்குள்ளே சுமார் 20 அரசர்கள், நூற்றுக்கணக்கான கனவான்களின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன. அநேக பிரமிட்டுகள் இந்த வட்டாரத்திலிருந்தாலும், இந்த பிரமிட் கோபுரமே உலகிலேயே, வெட்டின கல்லால் கட்டப்பட்ட, பழைய கட்டிடம் என கூறப்படுகிறது.

### கீசா, பிரமிட்டு

உலக அதிசயங்களில் ஒன்று என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டது இது. எல்லா பிரமிட்டுகளிலும் பெரியது. இது 455 அடி உயரம். ஒவ்வொரு பக்கமும் 750 அடி நீளமுள்ளது. ஒவ்வொரு கல்லும் 3 முதல்

10 டன் எடையுள்ள 2,50,000 கற்களால் கட்டப் பட்டுள்ளது. இந்த பிரமிட்டின் அடிப்பகுதி 13 முதல் 14 ஏக்கர் பரப்பளவுள்ளது. இது சீயோப்ஸ் என்ற அரசனின் கல்லறை.

**தேபீஸ் - ராஜாக்களின் பள்ளத்தாக்கு**

கெய்ரோவிலிருந்து சுமார் 700 கி.மீ. தூரத்தி லுள்ளது இந்த தேபீஸ். எகிப்தின் இரண்டாம் தலைநகர் இருந்த இடம் வேதத்தில் 'நோ' என்று அழைக்கப் பட்டுள்ளது (எரே.46:25; எசே.30:14-16) (நாம் 'எஸ்' 'Yes' என்று சொல்வோமா!) இது பள்ளத்தாக்காக இருக்கிறது. இந்த இடத்திற்கு தற்போதுள்ள பெயர் லக்ஸர். இங்கே ஆதிகால அரசர்களின் கல்லறைகள் 64 உண்டு. கோடிக்கணக்கான மதிப்புள்ள புதையல்கள் கண்டுபிடிக்கப்பட்டு கெய்ரோ மியூசியத்தில் வைத்து உள்ளனர்.

**கர்நாக்**

ஆதிகால உலக அதிசயங்களில் மற்றொன்று இங்கே இருக்கிறது. மூன்று கோவில்கள், சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டிருந்தன. இதில் ஒரு பெரிய மண்டபம் உண்டு. இதில் 134 தூண்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் 75 அடி உயரம், 12 அடி சுற்றளவு உள்ளது. இந்த ஒவ்வொரு தூணின் உச்சி யிலும் 100 பேர் தாராளமாக நிற்கக்கூடிய அளவிற்கு இடமுண்டு என்று கூறப்படுகிறது. (நீங்கள் யாரும் மேலே ஏற முயற்சிக்கவேண்டாம். உங்களை இந்தியா விற்கு பத்திரமாகக் கொண்டு போய் சேர்க்க வேண் டியது என் பொறுப்பு). இந்த தூண்கள் மிகச் சிறந்த சித்திர வேலையால் அலங்கரிக்கப்பட்டுள்ளதை பாருங்கள்.

### கெய்ரோ

எகிப்தின் தலைநகரம் கெய்ரோ. மக்கள் தொகை சுமார் ஒரு கோடி. பழைய கெய்ரோவில் கட்டப் பட்டுள்ள ஆலயத்திற்குள்ளிருக்கும் இடத்தில்தான் யோசேப்பும், மரியாளும் இயேசுவாகிய குழந்தையைப் பாதுகாத்தனர்.

### அலெக்ஸாண்ட்ரியா

கெய்ரோவிற்கு வடமேற்கிலுள்ளது. மக்கள் தொகை சுமார் 32,00,000. ஆதி நாட்களில் இங்கே புகழ் வாய்ந்த நூலகம் இருந்தது. எபிரேய மொழியில் எழுதப்பட்டுள்ள பழைய ஏற்பாடு முதன்முதலில் இந்தப் பட்டணத்திலிருந்துதான் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நாட்டின் வளத்திற்கு பெரிதும் உதவுவது நைல் நதி தான். மக்கள் இந்த நதிப் பகுதியில்தான் வாழ்கின்றனர். இந்த நாட்டின் 96% பூமி வெறும் பாலைவனமே.

*எகிப்தைப் பற்றிய சில புள்ளி விபரங்கள்:*


✱ கல்வி கற்றோர் : 45%,

✱ தேசிய மொழி : அரபி,

✱ முஸ்லீம்கள் : 85.4%,

✱ கிறிஸ்தவர்கள் : 14.2%,

✱ வருட வருமானம் : 630 டாலர் (சுமார் ரூ.25,200).



# சிரியா



இஸ்ரவேல் நாட்டிற்கு வடகிழக்கில் இருப்பது சிரியா. சிரியாவிற்கு வடக்கே துருக்கியும், மேற்கே லெபனோனும், மத்திய தரைக்கடலும், தெற்கே ஜோர்டானும், கிழக்கிலும் தென்கிழக்கிலும் ஈராக்கும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

*சிரியாவைப் பற்றிய சில புள்ளி விபரங்கள்:*

- பரப்பளவு : சுமார் 1,85,000 ச.கி.மீ.
- மக்கள் தொகை : சுமார் 1 கோடியே 49 லட்சம். (இதில் 85 சதவிகிதம் அரேபியர். பலதரப்பட்ட சிறுபான்மையினரும் வாழ்கின்றனர்).
- முஸ்லீம்கள் : 90.5%,
- கிறிஸ்தவர்கள் : 8%,
- கல்வி கற்றோர் : 65%,
- தேசிய மொழி : அரபி
- வருட வருமானம் : 1000 டாலர் (சுமார் ரூ.40,000).
- தலைநகர் : தமஸ்கு

**தமஸ்கு**

மக்கள் தொகை 18,50,000. உலகிலேயே மிக பழைய பட்டணம். சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்பே இங்கே மக்கள் வாழ்ந்து வந்ததாக கூறப் பட்டுள்ளது. இந்தப் பட்டணம் தெக்கப்போலி என்று

வேதத்தில் கூறப்பட்டுள்ளது. பண்டை காலத்தில் இந்த வட்டாரத்தில் சுதந்திரமாக இருந்த 10 பட்டணங் களைக் குறிக்கும் அந்த 10 பட்டணங்கள் 1.பெத்ஷான் 2.பெல்லா 3.டையான் 4.கனத்தா 5.ராப்பனா 6.ஹைப்போஸ் 7.கடாரா 8.பிலதெல்பியா (அம்மான்) 9.தமஸ்கு 10.கெரஸா (ஜெராஸ்). பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தமஸ்கு குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி. 14:15).

ஆபிரகாமின் வீட்டு விசாரணைக்காரனாயிருந்த எலியேசர் தமஸ்கு ஊரைச் சேர்ந்தவன் எனக் கூறப் பட்டுள்ளது (ஆதி.15:2). தமஸ்கு அரசர்களைப் பற்றி பல இடங்களில் காண்கிறோம் (2 சாமு.8:5, 1 இரா. 11:23-25, 15:16-20, 16:5-9).

பவுல் கிறிஸ்தவர்களை சிறைபிடித்துவர எருசலே மிலிருந்து தமஸ்குவிற்குப் பயணமானதையும், போகும் வழியில் பவுல் இயேசுவை சந்தித்து கிறிஸ்தவனான தையும் அப்.9:1-19ல் காண்கிறோம். இந்தப் பயணம் சுமார் 6 நாட்கள் எடுத்திருக்கும் எனக் கூறப்படுகிறது.

அனனியா தமஸ்குவில் வாழ்ந்து வந்தான். ஆதி முதல் கிறிஸ்தவர்கள் இங்கே இருந்தார்கள். பவுல் தமஸ்குவில்தான் ஞானஸ்நானம் பெற்றார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றார். பவுல் தன் மனமாற்றத்திற்குப் பின் 3 ஆண்டுகள் அரேபியாவில் கழித்தபின் தமஸ்குவிற்கு திரும்பி வந்தார் (கலா. 1:17,18). அவரைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தபோது மதிலுக்கு வெளியே கூடையில் வைத்து வெளியேற்றப் பட்டார் (அப்.9:22-25; 2 கொரி.11:32,33). வேதத்தில்

கூறப்பட்டுள்ள நேர்த்தெரு இன்றும் இருக்கிறது (அப். 9:11). இந்தத் தெரு தமஸ்குவின் மையத்தில் இருக் கிறது. பட்டணம் இந்த தெருவிற்கு மேற்கேயும் கிழக்கேயும் இருக்கிறது.


**ஆப்னா, பர்பார் நதிகள்**

நாகமான் எலிசாவை நோக்கி, "நான் ஸ்நானம் பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளான ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொன் னான்" (2 இரா.5:12). இந்த ஆப்னா நதி தமஸ்கு பட்டணத்தில் இருக்கிறது. பர்பார் என்ற நதி தமஸ்கு விலிருந்து சில மைல்கள் தெற்கே இருக்கிறது.

**தத்மோர்; பல்மைரா**

வேதத்தில் தத்மோர் என்று கூறப்பட்டுள்ள பட்டணம் தற்போது பல்மைரா என்று அழைக்கப் படுகிறது (2 நாளா.8:3,4). இது தமஸ்குவிலிருந்து வட கிழக்கில் சுமார் 150 மைல் தூரத்தில் இருக்கிறது. சாலொமோன் பொருட்களை சேர்த்து வைக்கும் பண்டகசாலை பட்டணமாக இதைக் கட்டினான். சாலொமோன் காலத்தில் இந்த ஊர் வியாபாரத்தில் சிறந்து விளங்கிற்று. வியாபார தேசிய நெடுஞ்சாலை இதன் வழியாக சென்றது.

சிரியாவிற்கு அருகிலுள்ள லெபனோனுக்கு போகப் போகிறோம். ஆகாய விமானம் தேவையில் லை. பக்கத்து நாடுதான், பஸ்ஸில் போய் விடுவோம்.



# லெபனோன்



லெபனோன் வேதத்தில் லீபனோன் என்று அழைக்கப்படுகிறது. கி.பி.1981க்கு பின்புதான் தற்போதுள்ள நாடு லெபனோன் என்று அழைக்கப் பட்டது. முதலாவது பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்தது. கி.பி.1941ல் சுதந்திரம் பெற்றது.

*லெபனோனைப் பற்றிய சில புள்ளி விபரங்கள்:*

கிழக்கேயும் வடக்கேயும் சிரியா, மேற்கே மத்திய தரைக்கடல், தெற்கே இஸ்ரேல் இதன் எல்லையாக அமைந்துள்ளன.

★ பரப்பளவு : சுமார் 10,400 ச.கி.மீட்டர்.

★ மக்கள் தொகை : சுமார் 32 லட்சம் பேர்.

★ அரேபியர் : 86%

★ முஸ்லீம் : 53%

★ கிறிஸ்தவர் : 38.7%

★ தேசிய மொழி : அரபி

★ கல்வி கற்றோர் : 70%

★ வருட வருமானம் : 800 டாலர் (சுமார் ரூ.32,000)

★ தலைநகரம் : பெய்ரூட்

★ மக்கள் தொகை : 14,18,000.

இரண்டு மலைத்தொடர்களுக்கும் மத்தியிலுள்ள அழகான பள்ளத்தாக்கு நாடு லெபனோன். சுமார் 120 கி.மீ. நீளமும் 16 கி.மீ அகலமும் உள்ளது. இந்த பள்ளத்தாக்கு பெக்கா என்று அழைக்கப்படுகிறது.

உபா.1:7; 11:24ல் லீபனோன் என்று முதலாவதாக வேதத்தில் வருகிறது. லீபனோன் ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது (சங்.72:16; 104:16-18; உன்.4:15; ஏசா.2:13; 35:2, 60:13; ஓசியா 14:5). எருசலேமின் தேவாலயத்திற்கு தேவையான கேதுரு மரங்கள் இங்கிருந்து கொண்டுவரப் பட்டது (1 இரா.5:8-11). இந்த கேதுரு மரங்களை இன்றும் லெபனோன் மலைகளில் காண முடியும். புதிய ஏற்பாட்டு காலத்தில் லெபனோன், பெனிக்கே (பொனீசியா) என்று அழைக்கப்பட்டது (அப்.11:19; 15:3, 21:2).

**கேபால் - பைப்லோஸ்**

தற்போதுள்ள இதன் பெயர் பைப்லோஸ். இது லெபனோனின் தலைநகரமான பெய்ரூட்டிற்கு வடக்கே 40 கி.மீ தூரத்தில் மத்திய தரைக்கடல் கரை ஓரத்தில் அமைந்துள்ளது. வேதாகம நாட்களில் இது கேபால் என்று அழைக்கப்பட்டது. சங்.83:6, யோசுவா 13:5ல் கிப்லியர் என்று இந்த ஊரார் என்று அழைக்கப் பட்டனர். 1 இரா.5:18ல் கிபலி ஊரார் என்று வருகிறது. இவர்கள் எருசலேம் தேவாலய வேலைக்குத் தேவையான மரங்களை சேகரிப்பதில் உதவி செய்தனர். இந்த பட்டணத்தின் மதில்கள் கி.மு.2900ல் கட்டப்பட்டவை.

ஆதிகாலத்தில் எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட பப்பாய்ரஸ் (**PAPYRUS**) என்ற நாணற்செடியிலிருந்து ஆயத்தமாக்கப்பட்ட ஓலை இந்த ஊரில்தான்

தயாரிக்கப்பட்டது. இந்த ஊரின் பெயர் பைப்லோஸ் (BYBLOS) என்று பார்த்தோம்.

எனவே இந்த ஊரிலிருந்து தயாரிக்கப்பட்ட பப்பாய்ரஸ் ஓலையில் எழுதப்பட்ட நூல்களை, இந்த ஊரின் பெயரைக் கொண்டு 'பிப்லியா' (BIBLIA) என்று கிரேக்கர் அழைத்தனர். வேதாகமமும் இந்த முறையில் எழுதப்பட்ட போது அதற்கு 'பிப்லியா' (BIBLIA) என்று பெயர் சூட்டினர். இந்த வார்த்தையிலிருந்துதான் ஆங்கில வார்த்தையான 'பைபிள்' (BIBLE) என்பது வந்தது. இதன் பொருள் "புத்தகங்களின் புத்தகம்" (BOOK OF BOOKS) என்பதாகும். "எல்லா புத்தகங்களுக்கும் மேலானது" என்பது பொருள். ஆரம்ப நாட்களில் அநேக வேதாகம பிரதிகள் இந்த ஊரில் கையினால் எழுதப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டது. எனவே இந்த ஊர் "புத்தகத்தின் ஊர்" என்றும் அழைக்கப்படுகிறது.

இன்று ரூ.50 கொடுத்து பைபிள் வாங்க ஆயிரம் யோசனை செய்கிறீர்கள். 66 புத்தகங்கள் அடங்கிய பரிசுத்த வேதாகமத்தை ஏராளமாய் வாங்கி தாராளமாய் வாசியுங்கள், பிறருக்குக் கொடுங்கள். என்ன அசந்து போய் நின்றுவிட்டீர்கள்! நாம் போக வேண்டிய தூரம் வெகுதூரம், புறப்படுங்கள்.

**சீதோன்**

பெய்ரூட்டிலிருந்து தெற்கே சுமார் 48 கி.மீ தூரத்திலிருப்பது சீதோன். கானானியரின் வடக்கு எல்லையாய் சீதோன் இருந்தது (ஆதி.10:19). யோசுவா இதை பெரிய சீதோன் என்று அழைக்கிறார் (யோசு.11:8). சீதோனியர் இஸ்ரவேலரை ஒடுக்கினர் (நியா.10:12).

சீயோனின் ராஜாவாகிய ஏத்பாகாலின் மகளான யேசபேலை, ஆகாப் விவாகம் செய்ததினிமித்தம் விக்கிர ஆராதனை இஸ்ரவேலுக்குள் நுழைந்தது (1 இரா.16:31-33). இந்த பட்டணத்தின் பாவத்தை இயேசு கண்டித்துப் பேசினார் (மத்.11:21-24). கி.மு.351ல் பெர்சியர் இந்த பட்டணத்தை முற்றுகையிட்டனர். இந்த பட்டண மக்கள் சரணடைவதற்குப் பதில், பட்டணத் திற்கு தாங்களே தீ வைத்து 40,000 பேர் மாண்டனர். இயேசுகிறிஸ்துவும் தம் பயணத்தில் இதன் எல்லை வரை வந்தார் (மத்.15:21; மாற்.7:24). சீரோபேனிக்கியா பெண்ணின் மகளை அசுத்த ஆவியிலிருந்து விடுவித் தார். ஏரோதுவிடம் இந்த பட்டணத்தார் வந்தனர் (அப். 12:20). பவுல் ரோமாபுரிக்கு கைதியாக கொண்டு செல்லப்பட்டபோது சீதோனிலிருந்து தன் நண்பர் களை சந்தித்தான் (அப்.27:3).

### தீரு

சீதோனுக்கு தெற்கே சுமார் 48 கி.மீ. தூரத்தில் கடற்கரை பட்டணமாக அமைந்திருந்தது இந்த தீரு (யோசு.19:29). இந்தப் பட்டணத்தின் ஒரு பகுதி கடலுக்குள்ளும் தீவாக கட்டப்பட்டிருந்தது. நேபுகாத் நேச்சார் என்ற பாபிலோன் அரசன் இதைப் பிடிக்க 13 ஆண்டுகாலம் முற்றுகையிட்டான். கடற்கரையிலி ருந்த பகுதியை பிடித்தான். கடலுக்குள்ளிலிருந்த பகுதியை அவனால் பிடிக்க முடியவில்லை. இதற்கு விரோதமான தீர்க்கதரிசனங்கள் பல உண்டு (எசேக். 26:1; 28:19; ஏசாயா அதிகாரம் 23; எசே.26:4). இந்த பட்டணத்திலிருந்த ராஜா எருசலேம் தேவாலய பணிக்கு ஏராளமான மரங்களைக் கொடுத்தான்


(1 இரா.5:1-12). வெண்கல வேலைக்கு இந்த பட்டணத்து நிபுணர்கள் சாலமோன் அரசனுக்கு உதவினர் (1 இரா.7:13,14). இயேசுகிறிஸ்துவின் போதனைகளைக் கேட்க இந்த வட்டார மக்கள் வந்தனர் (மாற்கு 3:8; லூக்.6:17). பவுலின் நண்பர்கள் பலர் இந்தப் பட்டணத்திலிருந்தனர் (அப்.21:2-6).

**சாரிபாத்**

(சரப்தா) இன்று இதன் பெயர் சாரபெண்ட்.

தீருவுக்கும் சீதோனுக்கும் மத்தியில், மத்திய தரைக்கடல் கரையில் இருந்தது இந்த ஊர். பஞ்ச காலத்தில் போஷிக்கப்படும்படி கர்த்தர் எலியாவை இந்த ஊரிலிருந்த விதவையின் வீட்டிற்கு அனுப்பினார் (1 இரா.17:8-16; லூக்.4:25,26). மாவும், எண்ணெயும் குறையாத அற்புதம் இங்கே நடந்தது. விதவையின் மகன் மரித்துப் போனபோது எலியா அவனை உயிருடன் எழுப்பினதும் இந்த ஊரில்தான் (1 இரா. 17:17-24). ஒபதியா 20ம் வசனத்தில் இந்த ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது.

லெபனோன் தலைநகர் பெய்ரூட்டிலிருந்து எக்ளிசியா பிளைட் 777மூலம் ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு போவோமா? பக்கமான நாடுதான். ஆனாலும் உங்களை சில நாட்களாய் பஸ்ஸிலேயே பயணம் செய்ய வைத்துவிட்டோம். எனவே இப்போது விமான பயணத்தின்மூலம் ஈராக்கின் தலைநகரான பாக்தாத்திற்கு வருகிறோம். பாக்தாத்திற்கு பார்த்துதான் போக வேண்டியிருக்கிறது. காரணம் சதாம் உசேன் இருக்கிறாரே.



# ஈராக்



முதலாம் உலக மகாயுத்தத்திற்குப்பின் அதுவரை துருக்கியிடமிருந்த ஈராக், பிரிட்டிஷ் ஆட்சிக்குள் வந்தது. கி.பி.1932ல் சுதந்திரமடைந்தது. டைக்ரீஸ், ஐப்பிராத்து ஆகிய இரண்டு நதிகளுக்கும் இடைப் பட்ட பூமிதான் பண்டைய நாட்களில் மெசப்பத்தோ மியா என்று அழைக்கப்பட்டது. 'மெசப்பத்தோமியா' என்ற வார்த்தையின் பொருளே 'நதிகளுக்கு இடையே யுள்ளது' என்பதுதான் (ஆதி.24:10; அப்.7:2). இதுவே இப்போது ஈராக் என்று அழைக்கப்படுகிறது.

*ஈராக்கைப் பற்றிய சில புள்ளி விபரங்கள்:*

வடக்கே துருக்கி நாடு, கிழக்கே ஈரான், தெற்கே குவைத், பெர்சியன் வளைகுடா, தென்மேற்கே சவுதி அரேபியா, மேற்கே சிரியா.

- ✦ மக்கள் தொகை : 2,24,11,000
- ✦ அரேபியர் : 74.4%
- ✦ கல்வி கற்றோர் : 60%
- ✦ தேசிய மொழி : அரபி, குர்டிஷ்
- ✦ முஸ்லீம் : 95.4%
- ✦ கிறிஸ்தவர் : 3.3%
- ✦ வருட வருமானம் : 10,000 டாலர் (சுமார் ரூபாய் 4 லட்சம்).

✦ பரப்பளவு : 4,35,000 ச.கி.மீ.

✦ தலைநகர் : பாக்தாத்

✦ மக்கள்தொகை : சுமார் 47 லட்சம்.

இந்த நகரம் சுமார் 1,200 வருடங்களுக்கு முன் இஸ்லாமிய கலிபாக்கள்மூலம் கட்டப்பட்டது. எனவே வேதாகம நாட்களில் இந்த பட்டணம் உருவாக வில்லை. மற்ற முக்கிய பட்டணங்கள் பாஸ்ரா, மோசுல், சுலைமானியா.

**டைகிரீஸ்**

இந்த நதி சுமார் 1,500 மைல் நீளமுள்ளது. இந்த நதி அர்மோனியாவில் உற்பத்தியாகி துருக்கி வழியாக தென்மேற்கில் ஓடி பெர்சிய வளைகுடாவிற்கு 100 மைல் தூரத்தில் ஐப்பிராத்து நதியுடன் இணைகிறது. இந்த டைக்ரீஸ் நதிதான், வேதத்தில் இதக்கெல் என்று அழைக்கப்படுகிறது (ஆதி.2:14; தானி.10:4).

**ஐபிராத்து நதி**

துருக்கியின் கிழக்குப் பகுதியிலே, கருங்கடலுக்கு அருகில் உற்பத்தியாகி, சிரியா வழியாக மெசப்பத் தோமியா சமவெளி வழியாக ஓடி, டைக்ரீஸுடன் இணைந்து பெர்சிய வளைகுடாவில் கடலில் கலக் கிறது. ஐபிராத்து நதியின் நீளம் சுமார் 2800 மைல். இதில் 1600 கி.மீ. தூரத்திற்கு கப்பல் போகும் அளவிற்கு ஆளமுள்ளது. ஐபிராத்து நதி வேதத்தில் முதன் முதலாக ஆதி.2:14ல் கூறப்பட்டுள்ளது. யாத்.23:31; உபா.11:24ல் நதி என்றும், ஆதி.15:18; உபா.1:7ல் பெரிய நதி என்றும் அழைக்கப்படுகிறது. ஆபிரகாமுக்கும்

அவன் சந்ததிக்கும் கர்த்தர் வாக்குப்பண்ணின தேசத்தின் வடகிழக்கு எல்லையாக இது கூறப் பட்டுள்ளது. தாவீது, சாலொமோன் நாட்களில் கொஞ்ச காலம் இந்தப் பகுதி இஸ்ரவேலின் ஆளுகைக்குள் இருந்தது (2 சாமு.8:3; 10:14; 1 இரா.4:24). யோயாக்கீன் யூதாவை ஆண்டபோது பாபிலோன், எகிப்து ஆகிய ராஜ்யங்களைப் பிரிக்கும் எல்லையாக ஐபிராத்து குறிக்கப்பட்டுள்ளது.

**ஊர்**

ஆபிரகாம் வாழ்ந்த ஊர் என்ற கல்தேயர் பட்டணம் தற்போதுள்ள ஈராக்கில் இருந்தது. இப்போதுள்ள பாக்தாத்திலிருந்து தென்கிழக்கில் சுமார் 400 கி.மீ. தூரத்திலிருந்தது. ஐபிராத்து நதிக் கரையில் இது கட்டப்பட்டிருந்தது (ஆதி.11:28,31; 15:17; நெகே.9:7; அப்.7:4). பண்டைய நாட்களில் சுமேர் என்ற நாட்டின் தலைநகராக ஊர் இருந்தது. வேதத்தில் சிநெயார் தேசம் என்று அழைக்கப்படுவது சரித்தி ரத்தில் சுமேர் என்று கூறப்படுகிறது (ஆதி. 11:2). பெர்சிய வளைகுடாவிற்கும் பாக்தாத் பட்டணத்திற்கும் இடைப்பட்ட பூமி சுமேர் என்று அழைக்கப்பட்டது.

ஊர் என்ற பட்டணம் இருந்த இடத்தில் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் அநேக கல்வெட்டு களை கண்டுபிடித்துள்ளனர். மனித சரித்திரத்தின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த மக்களின் தலைநகராய் இது விளங்கிற்று. கி.மு.3500 ஆண்டுகளுக்கு முன்பே இங்கே ரதங்கள் இருந்திருக்கின்றன. 60 என்ற எண்ணை மையமாக கொண்ட கணக்கீடு இங்கேதான் ஆரம்பமாயிற்று. உதாரணமாக 60 வினாடி ஒரு நிமிடம்

60 நிமிடம் ஒரு மணி. ஒரு வட்டத்தை 360 டிகிரியாக பிரிப்பது என்பதெல்லாம் இந்த ஊரில்தான் ஆரம்ப மாயிற்று. ஊரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த 'ஊர் நாமு' என்பவன் தான் 4000 ஆண்டு களுக்கு முன்பே உலகத்திலேயே மிகப் பழமையான வாழ்க்கை முறை சட்டத்திட்டங்களை ஏற்படுத்தினான் என கல்வெட்டுகள் கூறுகின்றன. ஹம்முரபி சட்ட திட்ட முறைகள் இதிலிருந்து கடன் வாங்கப்பட்டவை கள்தான். சுமார் கி.மு.1750ல் ஹம்முரபி சுமேர் நாட்டை தன் வசப்படுத்தினான். பாபேல் கோபுரத்திற்கு சமமான கோபுரம் ஒன்று ஊர் பட்டணத்திலும் இருந்தது. இந்த ஹம்முரபி என்பவன் ஊருக்கு வடக்கே இருந்த பாபிலோனிலிருந்து வந்தவன் என்பது குறிப்பிடத் தக்கது.

**பாபிலோன்**

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்திற்கு தெற்கே சுமார் 80 கி.மீ. தூரத்திலிருக்கிறது. முதன்முதலாக பாபிலோன் ஆதி.11:1-6 வசனங்களில் வருகிறது. இங்கேதான் பாபேல் கோபுரம் கட்டப்பட்டது. சூரிய வெளிச்சத்தில் உலர வைத்த செங்கலால் பாபேல் கோபுரம் கட்டப்பட்டது. மரமோ கல்லோ பயன்படுத்தப் படவில்லை. ஏராளமான படிக்கட்டுகளுடைய கட்டிட மாயிருந்தது. கோபுர வடிவிலுள்ள பிரம்மாண்டமான கட்டிடங்களின் சிதைவுகள் பல இன்னும் இந்தப் பகுதிகளில் காணக்கூடியதாயிருக்கின்றன. படிக்கட்டு களடங்கிய கட்டிடங்களாயிருக்கின்றன. பொதுவாக இந்தக் கட்டிடங்களில் மூன்று பகுதிகள் இருக்கின்றன. இதன் உச்சியில் பாபிலோனிய தேவர்களின் சிலையும்,

கோயிலும் இருக்கின்றன. சில கட்டிடங்களின் உயரத்தில் 8 பகுதிகளும் இருக்கின்றன. முதன் முதலாக நிம்ரோத் என்பவன் பாபிலோனை கட்டினான் (ஆதி.10:8-10). கி.மு.1830 முதல் பாபிலோன் பிரபல்யமடைய ஆரம்பித்தது. ஆனால் நேபுகாத் நேச்சார் அரசாண்ட காலத்தில் தான் இதன் புகழ் உலகமெங்கும் பரவிற்று. நேபுகாத் நேச்சார் அரசாண்ட காலம் கி.மு.605-562. நேபுகாத் நேச்சார் காலத்தில் பாபிலோன் மிகச் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டது. உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு தோட்டம் கட்டப்பட்டது.

பாபிலோன் பட்டணத்தைச் சுற்றி ஒவ்வொரு பக்கமும் சுமார் 15 மைல் நீளத்திற்கு கோட்டைச் சுவர்கள் கட்டப்பட்டிருந்தன. கோட்டைச் சுவர்களின் உயரம் 250 முதல் 300 அடி உயரமாயும், சுமார் 80 அடி அகலமுள்ளதுமாயிருந்தன. உள்மதில் வெளிமதில் என்று இரண்டு கோட்டைச் சுவர்கள் பிரமாண்டமான அளவில் கட்டப்பட்டிருந்தன. ஐபிராத்து நதி பட்டணத்தின் மத்தியில் ஓடிற்று. கோட்டைச் சுவரில் ஒவ்வொரு திசையிலும் பிரம்மாண்டமான வாசல்கள் 25 இருந்தது. மேற்கில் 25, கிழக்கில் 25, தெற்கில் 25, வடக்கில் 25 ஆக மொத்தம் 100 வாசல்கள் இருந்தது.


நேபுகாத்நேச்சாரைப் பற்றி தானியேல் புத்தகத்தில் வாசிக்கின்றோம். இவன்தான் சாலொமோன் கட்டின எருசலேம் தேவாலயத்தை இடித்தான். கி.பி.539ல் மேதிய பெர்சிய அரசர்கள் பாபிலோனை மேற்கொண்டார்கள் (தானி.5:30,31). பாபிலோனின் அழிவைக் குறித்து பல தீர்க்கதரிசனங்கள் உள்ளன (ஏசா.13:

19-22,47; எரே.50:51). வியாதியாயிருந்த மகா அலெக்சாண்டர் கி.மு.323ம் ஆண்டு ஜூன் மாதம் 13ம் தேதி பாபிலோனில் மரித்தார்.


**நினிவே**

பாபிலோனுக்கு வடக்கே சுமார் 320 கி.மீ. தூரத்தில் டைக்ரீஸ் (இதெக்கல்) நதியின் கரையில் நினிவே கட்டப்பட்டிருந்தது. அசீரியாவின் தலைநகராக இருந்தது நினிவே. யோனா தீர்க்கதரிசி இந்தப் பட்டணத்திற்கு அனுப்பப்பட்டான். மகா நகரம் என்று இது குறிப்பிடப்பட்டுள்ளது (யோனா 1:2; 3:2,3; 4:11). அந்நாட்களிலேயே இந்தப் பட்டணத்தில் 1,20,000 பேர் இருந்தனர் (யோனா 4:11).

கி.மு.612ல் நினிவே மேதிய பாபிலோனிய சேனைகளால் அழிக்கப்பட்டது. நினிவேயின் அழிவைக் குறித்து நாகூம் தீர்க்கதரிசனம் உரைத்தான் (நாகூம் 1:8; 2:8). அசீரிய ராஜாக்கள் சமாரியா, எருசலேமுக்கு விரோதமாக படையெடுத்து வந்தார்கள் (2 இராஜா. 17:3-6; 23; 18:13-19; 37; 2 நாளா.32:1-21; ஏசா.36:37).



# ஈரான்



கி.பி.1935க்கு முன்வரை இது பெர்சியா என்று அழைக்கப்பட்டது. உலக வல்லரசுகளில் பழமையான ஒன்று.

*ஈரானைப் பற்றிய சில புள்ளி விபரங்கள்:*

ஈரானின் எல்லைகளாக வடக்கே ரஷ்யாவும், கேஸ்பியன் கடலும், கிழக்கே ஆப்கானிஸ்தானும், பாகிஸ்தானும், தெற்கே பெர்சியா வளைகுடாவும், மேற்கே ஈராக்கும் உள்ளன.

☆ பரப்பளவு : 16,48,000 ச.கி.மீ.

☆ மக்கள் தொகை : 6,55,25,000

☆ தலைநகர் : டெஹ்ரான்

☆ மக்கள் தொகை : சுமார் 82,63,000

☆ கல்வி கற்றோர் : 52%

☆ தேசிய மொழி : பெர்சியா

☆ முஸ்லீம் : 99%

☆ கிறிஸ்தவர் : 0.4%

☆ முக்கிய நகரங்கள் : மாசாத், இஸ்பஹான், ராய், டாப்ரிஸ்

☆ வருட வருமானம் : 1,800 டாலர் (சுமார் ரூ.72,000)

'ஈரான்' என்றால் 'ஆரியருடையது' என்று பொருள். மேதிய பெர்சியர் இந்த ஆரிய வம்சத்தை சேர்ந்தவர்களே. மேதிய பெர்சியர்களைக் குறித்த குறிப்புகளை கீழ்க்காணும் வசனங்களில் காணலாம். 2 நாளா.36:21-23, எஸ்றா 1:1-4, எஸ்தர் 1:3,14,18; 10:2, தானி.8:20; 10:1,13,20; 11:12).

## டெஹ்ரானில் நடந்த முக்கிய நிகழ்ச்சி

1943ம் வருடம் நவம்பர் மாதம் 28 முதல் டிசம்பர் 1 வரை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கூட்டம் ஒன்று நடந்தது. அமெரிக்க ஜனாதிபதி பிராங்களின் ரூஸ்வெல்ட், பிரிட்டனின் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில், ரஷ்ய அதிபர் ஜோசப் ஸ்டாலின் ஆகிய முக்கிய தலைவர்கள் கூடி, ஹிட்லரின் முயற்சியை முறியடிக்க கலந்து ஆலோசித்து முடிவெடுத்தனர். இந்தக் கூட்டத்தின் பலனாக இரண்டாம் உலக மகா யுத்தம் வந்தது.

## பெஹிஸ்டன்

இன்று பெசிடன் என்று அழைக்கப்படுகிற இது ஒரு கிராமம். 1700 அடி உயர மலைகளில் இருக்கிறது. பாபிலோனுக்குச் சென்ற பாதை இந்த வழியாக சென்றது. தரியு அரசன் தன் வெற்றிகளை விவரித் துள்ள கல்வெட்டு இங்கே காணப்படுகிறது. மூன்று மொழிகளில் இந்த கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது.

1. பண்டைகால பெர்சிய மொழி

2. இலாமேயம்

3. அக்காடியன்

**ஹமதான்**

வேதத்தில் இது அக்மேதா பட்டணம் என்று அழைக்கப்படுகிறது (எஸ்றா 6:2). எருசலேம் தேவாலயத்தை திரும்பக் கட்டுவதற்கான கட்டளையை கோரேஸ் பிரகடனப்படுத்திய சுருள், இந்த ஊரில் தான் தரியுவினால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த பட்டணத்தின் மற்றொரு பெயர் எக்பட்டனா என்பதாகும். இது வடக்கு மேதியாவிற்கு தலைநகராக விளங்கிற்று. கோரேஸ் வழக்கு மன்றத்தை இங்கே நிறுவியிருந்தான்.

**பாஸர்கடே**

இந்த நகர் கோரேஸினால் கட்டப்பட்டது. தான் மேதிய பெர்சிய ராஜ்யத்தின் அதிபதியானதைக் குறிக்கும் வெற்றி சின்னமாக இதைக் கட்டினார். இங்கே கோரேஸின் அரண்மனை இருந்தது. கோரேஸின் கல்லறையும் இங்கேதான் இருக்கிறது.

**பெர்ஸிபோலிஸ்**


பெர்சியாவின் பண்டைகால தலைநகராக இருந்தது. இதைக் கட்டியது முதலாம் தரியு. இந்த பட்டணத்தை மகா அலெக்ஸாண்டர் பிடித்து இதன் ஒரு பகுதியை அழித்தான். இங்கே அநேக கல் தூண்கள் மேடான இடத்தில் இருக்கின்றன. இந்த இடத்திற்கு டக்டி ஜம்ஷீட் என்று பெயர். இந்த இடத்தில் தான் 2ம், 3ம் அர்தசஷ்டா அரசர்களின் கல்லறைகள் இருக்கின்றன. நக்ஷிரஷ்டாம் என்ற இடம் இதன் அருகில் உள்ளது. இங்கே தரியு. 1ம் அர்தசஷ்ட்ரம், 2ம் தரியு அரசர்களின் கல்லறைகள் இருக்கின்றன.

**சூசான்**

இன்றைய பெயர் சூசா. ஏலாமின் தலைநகராக இருந்தது. சூசான் பாபிலோனுக்கு கிழக்கே கர்கே நதிக்கரையில் கட்டப்பட்டுள்ளது. பெர்சிய வளைகுடா விலிருந்து வடக்கே 150 மைல் தூரத்திலிருக்கிறது. ஏலாமின் ராஜாவான கெதர்லா கோமேர் மற்ற அரசர் களுடன், சோதோமின் ராஜாவுடன் யுத்தம் செய்தான் என ஆதியாகமத்தில் வாசிக்கிறோம் (ஆதி.14:1-10).

பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் கூடின யூதர்களிலே ஏலாமிலிருந்து வந்தவர்களும் இருந் தனர். எலாமீத்தர் என்று வருகிறது (அப்.2:9). இன்றுள்ள சூசா வேதாகம நாட்களில் சூசான் என்று அழைக்கப்பட்டது (நெகே.1:1; எஸ்தர் 1:2). மகா தரியுவின் குளிர்கால அரண்மனை இங்கே இருந்தது. இந்த அரண்மனை சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டு இருந்தது. எஸ்தர் புஸ்தக நிகழ்ச்சிகள் இங்கேதான் நிகழ்ந்தன.

அகாஸ்வேரு என்ற பெர்சிய அரசன் இங்கே வாழ்ந்தான். சூசா என்ற இந்த பட்டணத்தில் பாபி லோன் அரசன் ஹம்முரபியின் சட்டப் பிரமாணங்கள் எழுதிய தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. சூசாவின் அருகிலுள்ள கர்கே நதிக்கரையில்தான் தானியேலின் கல்லறை இருப்பதாக முஸ்லீம் பாரம்பரியம் கூறுகிறது. இந்த இடத்திற்கு எதிரே ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது.



# துருக்கி



ஐரோப்பாவிற்கு மிக அருகாமையிலுள்ள ஆசிய நாடு துருக்கி. மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்த நாடு. மேற்கே அகாயா கடல், வடக்கே கருங்கடல், தெற்கே மத்தியதரைக்கடல், கிழக்கே மலைத் தொடர்ச்சி அதைத் தாண்டி ரஷ்யா, ஈரான், ஈராக், சிரியா எல்லைகள் இருக்கின்றன.

*துருக்கியைப் பற்றிய சில புள்ளி விபரங்கள்:*

* பரப்பளவு : 7,80,000 சதுர கி.மீட்டர் (சுமார் 1400 கி.மீ நீளமும், 600 கி.மீ. அகலமும் உள்ள நாடு).
* மக்கள் தொகை : 6,11,51,000 (6 கோடி)
* கல்வி கற்றோர் : 76%
* தேசிய மொழி : துருக்கி
* தலைநகர் : அங்காரா
* மக்கள் தொகை : 25,60,000
* முக்கிய நகரங்கள் : இஸ்தான்புல்
* முஸ்லீம் : 99.8%
* கிறிஸ்தவர் : 0.2%, (வெகு சில கிறிஸ்தவர்களே உள்ளனர். இவர்களும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களே).
* வருட வருமானம் : 1360 டாலர் (சுமார் ரூ.54,400)

துருக்கியின் பழைய பெயர் கான்ஸ்டான்டிநோபிள். அதற்கு முன்பிருந்த பெயர் பைசாண்டியம்.

இந்தப் பட்டணத்தில் மட்டும் சுமார் 600 மசூதிகள் இருக்கின்றன. இவைகளில் பல முற்காலத்தில் கிறிஸ்தவ ஆலயங்களாயிருந்தவை. இஸ்மிர் (பழைய சிமிர்னா) அடானா பர்ஸா ஆகியவை. ஒரு காலத்தில் கிறிஸ்து மார்க்கம் வேகமாய் பரவி வந்த இந்த நாடு இன்று ஒரு முஸ்லீம் நாடாக மாறிவிட்டது. வேதாகம நிகழ்ச்சிகளோடு அதிக தொடர்புள்ள நாடு இது.

**அந்தியோகியா (சிரியா)**

இன்று இதன் பெயர் அன்டாக்கியா. இந்த பட்டணம் முந்திய நாட்களில் சிரியாவிலிருந்தது. தற்போது இது துருக்கியில் உள்ளது. எருசலேமிலிருந்து வடக்கே சுமார் 500 கி.மீ. தூரத்திலிருக்கிறது. கி.பி.526ல் ஒரு பெரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டு, இப்பட்டணத்தில் சுமார் 2,50,000 பேர் மரித்தனர். இந்த பட்டணத்தில் சபை உருவானதையும், பர்னபா இங்கே சென்று ஊழியம் செய்ததையும், பின்பு பவுலை அழைத்து வந்து உபயோகித்ததையும் அப்.11ம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.

இயேசுவின் சீஷர்கள் முதன்முதலாக கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டது இங்கேதான் (அப். 11:26). பவுலின் மூன்று மிஷனரி பயணங்களும் இங்கிருந்துதான் ஆரம்பமானது (அப்.13:1-3; 15:36-41; 18:22,23). எருசலேமுக்குப் பதில் அந்தியோகியாவே கிறிஸ்தவத்தைப் பரப்புவதிலும் மிஷனரிகளை அனுப்புவதிலும் முக்கியப் பங்கு வகித்தது. ஆதி

சபைப் பிதா, கிறிசொஸ்தம், இந்த ஊரில் கி.பி.347ல் பிறந்தார்.

**அந்தியோகியா (பிசீதியா)**

பவுலும் அவன் நண்பர்களும் தங்கள் முதல் மிஷனரி பயணத்திலே, சீப்புரு தீவிலிருந்து பாப்போ பட்டணத்தைவிட்டு, பம்பிலியாவிலிருக்கும் பெர்கேக்கு வந்து, அங்கிருந்து இந்த அந்தியோகியாவிற்கு வந்ததாக வாசிக்கிறோம் (அப்.13:13,14). இங்கேயிருந்த யூத ஜெப ஆலயத்தில் பவுல் பிரங்கித்தார் (அப்.12: 14-43).

**அத்தலியா**

இன்று இதன் பெயர் அன்றலியா. இது பம்பிலியாவின் துறைமுகப்பட்டினம். இங்கிருந்து பயணமாகித் தான், பெர்கே, அந்தியோகியா, இக்கோனியம், லீஸ்திரா ஆகிய இடங்களுக்குச் சென்றனர் (அப்.14: 25,26).

**தெர்பை (அப்.14:6)**

இது லிக்கவோனியாவிலிருந்து லீஸ்திராவுக்கு தென்கிழக்கில் சுமார் 25 கி.மீ.தூரத்திலிருந்ததாக நம்பப்படுகிறது. இந்த ஊர் இருந்த இடத்தின் தற்போதைய பெயர் கொர்டிகுடியூக். இந்த ஊரில் இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒருவர்தான் காயு (அப். 20:4; ரோ.16:23). பவுல் தனது இரண்டாவது மிஷனரி பயணத்தில் இந்த ஊருக்கு வந்தார் (அப்.16:1).

**எபேசு**

இதன் நவீன காலப் பெயர் செலகக். பண்டைகால ரோம வல்லரசின் ஆசிய பகுதிக்கு எபேசு

தலைநகராக விளங்கிற்று. சிமிர்னாவுக்கும் மிலேத்து வுக்கும் இடையிலிருந்தது. சிமிர்னாவிலிருந்து சுமார் 60 கி.மீ. தென்கிழக்கிலிருந்தது. கேய்ஸ்டர் என்ற நதிக் கரையில் கட்டப்பட்டிருந்தது. பண்டைகால உலக அதிசயங்களில் ஒன்றான தியானாளின் கோவில் இங்கே இருந்தது. ரோமர் 'தியானாள்' என்றும், கிரேக்கர் 'ஆர்டிமிஸ்' என்றும் அழைத்தனர். பேய்க்கு எத்தனை விதவிதமான பெயர்கள்!

தியானாள் சிலை வானத்திலிருந்து விழுந்ததாக நம்பப்பட்டது. இதன் கோவில் 425 அடி நீளம், 240 அடி அகலமுள்ள ஒரு பெரிய மேடையில் கட்டப்பட் டிருந்தது. இந்த கோவிலின் நீளம் 377 அடி. அகலம் 180 அடி. உயரம் 60 அடி. இதற்குள்ளே 56 அடி உயரமும் 6 அடி விட்டமுள்ள தூண்கள் 127 இருந்தன. இந்த ஆலயம் தங்கம், பளிங்குக்கல், விலையேறப் பெற்ற மரம் ஆகியவற்றால் கட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு தூணும் ஒவ்வொரு நாட்டு அரசனால் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டது. இந்த கோவில் வளாகத்திற்குள்ளிருக்கும் குற்றவாளிகளை பிடிக்கக் கூடாது என சட்டம் இருந்தது. எனவே இது குற்ற வாளிகள் நிரம்பியிருந்த இடமாயிருந்தது. ஒழுக்கக் கேடான காரியங்கள் அனுதினமும் இங்கே நடை பெற்றன.

பவுல் தனது இரண்டாம் மூன்றாம் மிஷனரிப் பயணங்களில் இங்கே வந்து ஊழியம் செய்தார் (அப். 18:19-21; 19:1-7). மந்திரவாதிகளும் இயேசுவை ஏற்றுக்கொண்டு தங்கள் புத்தகங்களை சுட்டெரித்தனர் (அப்.19:19,20). இங்கே ஆரம்பிக்கப்பட்ட சபைக்குத்

தான் எபேசியருக்கு எழுதின நிருபம் எழுதப்பட்டது. இந்த பட்டணத்திற்கு அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவின் தாயைக்கூட்டி வந்து செலுமிஸஸ் என்ற மலையிலிருந்த வீட்டில் தங்கி பராமரித்தான் என்று கூறப்படுகிறது. 14ம் நூற்றாண்டில் இந்தப் பட்டணத்தை துருக்கியரும், மங்கோலியரும் தொடர்ந்து தாக்கினர். தியானாள் கோவில் இருந்த இடம் தெரியாமல் அழிந்தது.

**ஆரான்**

தேவன் ஆபிரகாமை அழைத்தபோது அவன் தன் தகப்பனாகிய தேராகுடன் புறப்பட்டு ஆரான் மட்டும் வந்து அங்கே தங்கினார்கள் (ஆதி.11:21). தேராகு இங்கே தான் மரித்தான் (ஆதி.11:32). இந்த இடம் ஆபிரகாம் வாழ்ந்து வந்த ஊர் என்ற பட்டணத் திலிருந்து சுமார் 1000 கி.மீ. வடக்கே இருந்தது. ஈசாக் கிற்கு பெண் பார்க்க தன் வேலைக்காரனை அனுப் பினது இந்த ஆரானுக்குத்தான் (ஆதி.24:10). பின்பு யாக்கோபு வந்து சேர்ந்து 20 ஆண்டுகள் தங்கியிருந் ததும் லேயாள், ராகேலை திருமணம் செய்ததும், பென்யமீனைத்தவிர அவன் பிள்ளைகள் யாவரும் பிறந்த ஊரும் இதுவே (ஆதி.28:10, 29:4, 35:16-19).

**இக்கோனியா**

தற்போதைய பெயர் கொன்யா. அந்தியோகியா (பிசிதியா)விலிருந்து தென்கிழக்கே சுமார் 120 கி.மீ. தூரத்திலிருக்கிறது. இந்தப் பட்டணம் வழியாக அகஸ்துராயன் அமைத்திருந்த ராஜபாதை சென்றது. ரோமர் காலத்திலிருந்த கலாத்தியா பகுதியிலிருந்த முக்கிய பட்டணங்களில் ஒன்று இது. பவுலும்

பர்னபாவும் அந்தியோகியாவிலிருந்து (பிசிதியா) துரத்திவிடப்பட்டபோது, அவர்கள் இந்த பட்டணத் திற்கு வந்தார்கள். பவுல் மறுபடியும் இந்தப் பட்டணத் தை சந்தித்தார் (அப்.15:36, 41, 16:12, 18:22).

**லவோதிக்கேயா**

பிரிகியாவின் தலைநகராக இருந்தது. எபேசுவி லிருந்து சுமார் 160 கி.மீ. தூரத்திலிருந்தது. கி.மு.261 -246 ஆண்டுகளில் வாழ்ந்த இரண்டாம் அந்தியோ கசின் மனைவியின் பெயர் லவோதிக்கே. அவள் ஞாபகர்த்தமாக கட்டப்பட்டது இந்த ஊர். இங்கே ஒரு சபை இருந்தது. வெளி.3:14-22 வசனங்களில் ஆவியானவர் இந்த சபையை எச்சரித்துப் பேசின செய்தியை காண்கிறோம். இன்று இந்த ஊர் இருந்த இடம் ஒரு பாழடைந்த நிலையிலும் கற்குவியலுள்ள பகுதியாகவும் இருக்கிறது. இந்த இடத்தின் நவீன காலப் பெயர் ‘டர்க்ஸ் எஸ்கிஹிசன்’. இதன் பொருள் ‘பழைய அரண்மனை’.

**லீஸ்திரா**

லிக்கவோனியா (LYCAONIA) பகுதியிலிருந்த பட்டணம் (அப்.14:6). இக்கவோனியாவிற்கு தென் மேற்கில் சுமார் 28 கி.மீ. தூரத்தில் அந்தியோகியா (பிசீதியா)விற்கு போகும் முக்கிய நெடுஞ்சாலையிலி ருந்தது. கலாத்தியாவின் பகுதியாகவுமிருந்தது. இக் கோனியா பட்டணத்தில் ஏற்பட்ட உபத்திரவத்திலி ருந்து தப்பி பவுலும் பர்னபாவும் லீஸ்திராவிற்கு வந்தனர். இங்கேதான் பவுலின் செய்தியை கேட்டுக் கொண்டிருந்த முடவன் அற்புத சுகம் பெற்றான்.

பர்னபாவை 'யூப்பித்தர்' என்றும் பவுலை 'மெர்க்குரி' என்றும் அழைத்தனர். ஜுப்பிட்டர் என்ற ரோம கடவுளுக்கு இணையானது ஜீயஸ் என்ற கிரேக்கக் கடவுள். மெர்க்குரி என்ற ரோம கடவுளுக்கு இணையானது ஹெர்மஸ் என்ற கிரேக்க கடவுள். பவுலையும் பர்னபாவையும் கடவுள் அவதாரம் என்று எண்ணி வணங்க முயற்சித்தனர். யூதர்கள் அவர்கள் மனதை மாற்றினபோது கல்லெறிய ஆரம்பித்தனர் (அப்.14:8-19). பவுல் மறுபடியும் லீஸ்திராவிற்கு வந்தார் (அப்.14:21; 18:23). லீஸ்திரா இருந்த இடத்தில் தற்போது சில தூண்களை மட்டுமே பார்க்க முடிகிறது.

**மிலேத்து**

எபேசு பட்டணத்திலிருந்து தெற்கே சுமார் 58 கி.மீ. தூரத்திலிருந்தது மிலேத்து. இது அகாயா பகுதிக்கு முக்கிய துறைமுகப்பட்டணமாக திகழ்ந்தது. பவுல் தன்னுடைய கடைசி பயணத்தில் எருசலேமுக்கு சென்றபோது இங்கே தங்கி எபேசு சபை மூப்பர்களை வரவழைத்தார். அவர்களுடன் உணர்ச்சிவசப்பட்டு பேசின செய்தியை அப்போஸ்தல நடபடிகளில் வாசிக்கிறோம் (அப்.20:17-38). மிலேத்து இருந்த இடத்தில் தற்போது பாலட் என்ற கிராமம் இருக்கிறது.

**பெர்கே**

பம்பிலியாவின் தலைநகராக விளங்கிற்று பெர்கே. தற்போது இதன் பெயர் முர்டானா. அத்தலியாவிற்கு கிழக்கே சுமார் 18 கி.மீ. தூரத்தில், கெஸ்ட்ரோஸ் என்ற ஆற்றுக்கரையில் அமைந்திருந்தது. பவுலும் பர்னபாவும் சிறிய ஆசியாவில் முதலாவது சந்தித்த ஊர் பெர்கே (அப்.13:13). இங்கிருந்து யோவான் மாற்கு

எருசலேமிற்கு திரும்பிப் போனான். பவுலும் பர்னபாவும் தெர்பையிலிருந்து இங்கு வந்து பிரசங்கித்தார்கள் (அப்.14:24,25).

**பெர்கமு**

தற்போது இதன் பெயர் பெர்கமா. சிமிர்னாவுக்கு வடக்கே சுமார் 110 கி.மீ. தூரத்தில் உள்நாட்டில் இருக்கிறது. இந்த பட்டணத்தின் பொது மண்டபம் சுமார் 1100 அடி உயரத்தில் மலையின் மேலிருக்கிறது. ரோமர் ஆட்சி செய்தபோது ஆசியா பகுதிக்கு பெர்கமு தலைநகராயிருந்தது. இந்த பட்டணத்தில் சாத்தானின் சிங்காசனம் இருந்ததாக வெளி.2:13ல் பார்க்கிறோம். பெர்கமு விக்கிரக வணக்கத்திற்கு மையமாக இருந்தது. ஜீயஸ் என்ற கடவுளுக்கு கட்டப்பட்ட பிரமாண்டமான பலிபீடம் இங்கே இருந்தது. அதன் நீளம் 125 அடி, அகலம் 115 அடி. இது 4C அடி உயர தூண்களில் நிறுத்தப்பட்டிருந்தது. பண்டை கால உலக அதிசயங்களில் ஒன்றாக இது விளங்கிற்று.

ஜெர்மனியிலுள்ள பெர்லின் அருங்காட்சியகத்தை சேர்ந்தவர்கள் இங்கு வந்து பல வருடங்கள் ஆராய்ச்சி செய்து இந்த உலக புகழ்பெற்ற ஜீயஸ் தேவதையின் பலிபீடத்தை கண்டுபிடித்து அதை ஜெர்மனிக்கே கொண்டுபோய்விட்டனர். சுமார் இரண்டு இலட்சம் நூல்களிலிருந்த ஒரு பிரமாண்டமான நூலகமும் இங்கே இருந்தது. அந்நாட்களின் வழக்கப்படி பெரும்பான்மையான புத்தகங்கள் தோல் சுருள்களில் எழுதப்பட்டிருந்தன. மார்க் அந்தோணி என்பவன் இந்த நூல்களை இங்கிருந்து எடுத்து

கிளியோபாட்ராவுக்கு அன்பளிப்பாக கொடுத்ததாக கூறப்படுகிறது. பெர்கமுவில் அரண்மனை இருந்தது. ஏராளமான விக்கிரக கோவில்கள் இருந்தன. இங்கே தான் ரோம அரசாங்கத்தால் குற்றஞ்சாட்டப்பட்டு முதன்முதலாக அந்திப்பா என்பவன் இரத்த சாட்சி யாக மரித்தான். ரோம பேரரசனுக்கு சிலை வைத்து வணங்கினார்கள். இந்த ஊர்மக்கள். 'அஸ்குலபியஸ்' என்ற சிலையையும் வணங்கினர். இது 'மருந்துகளின் கடவுள்' என நம்பினர்.

**பிலதெல்பியா**

துருக்கியிலிருந்த அடுத்த முக்கிய ஊர் பிலதெல் பியா. இதன் நவீன காலப்பெயர் அலஷேகிர். சர்தை யிலிருந்து தென்கிழக்கில் சுமார் 40 கி.மீ. தூரத்தில் ஒரு பள்ளத்தாக்கில் இருந்தது இந்த ஊர். 'பிலதெல் பியா' என்றால் 'சகோதர சிநேகம்' என்று பொருள். கடல் மட்டத்திலிருந்து சுமார் 650 அடி உயரத்தில் இந்த பட்டணம் உயரிய மேட்டில் கட்டப்பட்டிருந்தது. பல ரோம பேரரசர்களின் கோவில்கள் இங்கே கட்டப் பட்டிருந்தன. மற்ற இடங்களைவிட கிறிஸ்தவம் இந்த பட்டணத்தில் அதிகமாக வேரூன்றியிருந்தது. இங்கே இருந்த கிறிஸ்தவர்களில் அநேகர் இரத்த சாட்சியாய் மரித்தனர். பழைய பிலதெல்பியா இன்று இல்லை.

**சர்தை**

சிமிர்னாவுக்கு வடகிழக்கில் சுமார் 95 கி.மீ. தூரத்திலிருந்து சார்ட் என்ற கிராமம். இதன் அருகில் தான் சர்தை என்ற பட்டணமிருந்தது. தியத்தீராவிற்கு தெற்கே சுமார் 45 கி.மீ. தூரத்திலிருந்தது. இங்கே

அரண்மனை இருந்தது. இதில் லிதியாவின் அரசன் வாழ்ந்து வந்தான். முதன்முதலாக நாணயத்தை உருவாக்கினவன் இவன் என்று கூறப்படுகிறது. தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் இங்கு ஆராய்ந்து ஆர்ட்டிமிஸ் தேவதையின் கோவிலை கண்டுபிடித்த னர். இந்த கோவில் 300 அடி நீளம், 148 அடி அகல மாயிருந்தது.

**செலுக்கியா**

சிரியாவிலிருந்த அந்தியோகியாவிற்கு துறைமுகப் பட்டணமாக விளங்கிற்று. மத்திய தரைக்கடலின் கிழக்கு துறைமுகப் பட்டணங்களில் சிறந்த பட்டண மாக விளங்கிற்று. முதல் மிஷனரி பயணத்தில் பவுலும் பர்னபாவும் இந்த பட்டணத்தை கடந்துசென்றனர் (அப்.14:26). இதன் நவீன காலப்பெயர் சமன்டாக்.

**சிமிர்னா**

இதன் நவீன காலப்பெயர் இஸ்மிர். எபேசு பட்ட ணத்திலிருந்து வடக்கே சுமார் 65 கி.மீ. தூரத்தில் இஸ்மிர் வளைகுடாவிலிருந்தது. சின்ன ஆசியாவின் முக்கிய துறைமுகப்பட்டணமாக அகாயா கடல் ஓரத்தில் அமைந்திருந்தது. ஆசியாவின் அலங்காரம், மகுடம், அழகிய பட்டணம் என்று பல்வேறு விதங் களில் புகழப்பட்டது.

சிமிர்னா சபையின் புகழ்வாய்ந்த பிஷப்பாக இருந்தவர் போலிகார்ப். இவர் கி.பி.155ல் தமது 86வது வயதில் இங்கே இரத்த சாட்சியாக மரித்தார். ரோமர் ஆட்சிக் காலத்திலிருந்த சந்தைவெளியின்

சிதைவுகளை இப்போதும் காணலாம். மகா அலெக்ஸாண்டர் காலத்தில் பாகோஸ் மலையில் சுமார் 525 அடி உயரத்தில் கட்டப்பட்ட அழகிய மாளிகை இப்போதும் இருக்கின்றது.

**தர்சு**

சிறிய ஆசியாவின் தென் பகுதியான சிலிசியாவிற்கு தலைநகராக தர்சு விளங்கிற்று. சிட்னஸ் என்ற நதியின் இரு கரையிலும் கட்டப்பட்டிருந்தது. மத்திய தரைக்கடலிலிருந்து 16 கி.மீ. தூரத்திலிருந்தது. தர்சுவிலிருந்து 50 கி.மீ. தூரத்தில் வடக்கே தாரஸ் என்ற மலை இருக்கிறது. தர்சு அந்நாட்களில் துறைமுகப் பட்டணமாக விளங்கிற்று. அதனால் இங்கே வியாபாரம் சிறப்பாய் நடந்தது. ஐபிராத்து பள்ளத்தாக்கையும் சிறிய ஆசியாவையும் இணைக்கும் முக்கிய நெடுஞ்சாலை தர்சு வழியாக சென்றது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மூன்று முக்கிய பல்கலைக்கழகங்கள் இருந்தன. அவை (அத்தேனே) ஏதன்ஸ், அலக்ஸாண்டிரியா, தர்சு ஆகிய பட்டணங்களிலிருந்தன. இவைகளில் தர்சுவிலிருந்த பல்கலைக் கழகம் மற்றவைகளைவிட கல்வியில் சிறந்து விளங்கிற்று என்று கூறப்படுகிறது.

அந்தோணி, கிளியோபாட்ராவை கி.மு.38ல் சந்தித்தது இந்த தர்சு பட்டணத்தில் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போஸ்தலனாகிய பவுல் பிறந்த ஊரும் இதுவே (அப்.22:3; 21:39). பவுல் முதலாவது எருசலேமுக்கு போய், பின்பு இயேசுவை ஏற்றுக்கொண்டபின் தர்சுவிற்கு திரும்பி வந்து பல ஆண்டுகள்

இங்கேயே தங்கியிருந்ததாக பார்க்கிறோம் (அப். 9:30).

சிரியாவிலிருந்து அந்தியோகியா சபையின் அசாதாரண வளர்ச்சியை கண்டு, பர்னபா பவுலைத் தேடி தர்சுவுக்குப் போய் அவனைக் கூட்டிக்கொண்டு வந்தார் (அப்.11:25). இந்த பட்டணம் வழியாக பல தடவை பவுல் பயணம் செய்தார் (அப்.15:41; 12:23).

## தியத்தீரா

இதன் தற்காலப் பெயர் அக்கிசார். பெர்கமு பட்டணத்திலிருந்து சர்தைக்கு போகும் வழியில் தியத்தீரா இருந்தது. தியத்தீரா பெர்கமுவிலிருந்து தென் கிழக்கில் சுமார் 70 கி.மீ. தூரத்திலிருக்கிறது. சாயத் தொழில் இங்கே சிறப்பாய் நடைபெற்றது. இரத்தாம் பரங்களில் சாயம்பூசும் தொழில் இந்த ஊரின் சிறப்பு.

பிலிப்பு பட்டணத்தில், முதன்முதலாக பவுலின் ஊழியத்தில் இயேசுவை ஏற்றுக்கொண்ட பெண் லீதியாள் என்பது நமக்குத் தெரியும். அவள் தியத்தீரா ஊரைச் சேர்ந்தவள் (அப்.16:14). குறி சொல்லுகிற ஆவியையுடைய ஒரு கள்ளத் தீர்க்கதரிசி இந்த ஊர் சபையிலிருந்ததாக வெளிப்படுத்தல் 2:18 வசனங்களில் வாசிக்கின்றோம்.

## துரோவா


எஸ்கிஸ்தான்புல் என்பது இதன் நவீன காலப் பெயர். இதுவும் ஒரு துறைமுகப்பட்டணம். இந்த ஊரிலிருக்கும்போதுதான், பவுல் மக்கதோனியா நாட் டான் ஒருவன் வந்து தங்கள் ஊருக்கு வந்து நற்செய்தி

அறிவிக்கும்படி வேண்டிக்கொண்டதாக தரிசனம் கண்டார். பவுல் மறுபடியும் துரோவாவிற்கு வந்து அங்கிருந்த சபையை ஒருவாரம் சந்தித்தாக காண் கிறோம்.

இந்த ஊரில் பவுல் நடு இரவிற்கு பின்பும் பிரசங் கித்துக்கொண்டிருந்தபோது, மாடியிலிருந்த ஜன்னல் ஓரத்திலிருந்து பிரசங்கம் கேட்டுக்கொண்டிருந்தவ ஐத்திகு என்பவன் தூங்கி கீழே விழுந்து மரித்தான். பவுல் அவனை மறுபடியும் உயிருடன் எழுப்பினான் (அப்.20:6-12; 2 கொரி.2:12; 2 தீமோ.4:13).



# கிரேக்க நாடு



ஒரு காலத்தில் கிரேக்க நாடு உலகப் புகழ்பெற்ற நாடாக விளங்கிற்று. கிரேக்கக் கலாச்சாரம் உலக சரித்திரத்தில் முக்கிய இடம் வகித்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிரேக்க மொழி உலக மொழி யாக மதிக்கப்பட்டது. கல்வி கற்றவர் என்றால் கிரேக்க மொழி அறிந்தவர் என்ற நிலை இருந்தது. எனவே தான் அரமேய எபிரேய மொழி பேசினவர்கள் புதிய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் எழுதினர். கிரேக்க நாட்டைப்பற்றி சிந்திக்கும்போது, மகா அலெக்ஸா ண்டர் நமது நினைவிற்கு வருகின்றார். பவுலின் அதிக மான ஊழியம் இந்த நாட்டில் நடைபெற்றது.

பவுல் எழுதிய 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், பிலிப்பியர், 1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக் கேயர் ஆகிய ஐந்து நிருபங்களும் கிரேக்கநாட்டிலி ருந்த கொரிந்து, பிலிப்பி, தெசலோனிக்கே ஆகிய பட்டணங்களிலிருந்த சபைகளுக்கு எழுதப்பட்டன.

*கிரேக்க நாட்டைப் பற்றி சில குறிப்புகள்:*

மத்திய தரைக்கடலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இந்த நாடு, பால்கன் பெனின்சுலாவின் தென்கோடியிலிருக்கிறது.

- ✦ இதன் பரப்பளவு : 1,33,000 ச.கி.மீ.
- ✦ மக்கள் தொகை : 1,01,24,000

✦ கல்வி கற்றோர் : 94%

✦ அரசாங்க மொழி : கிரேக்கம்

✦ தலைநகர்: ஏதன்ஸ் (அத்தேனே)

✦ கிறிஸ்தவர்கள் : 98%
(இதில் 97 சதவிகிதம் கிரேக்க ஆர்தடாக்ஸ் சபை யைச் சேர்ந்தவர்கள்).

*எல்லைகள்*

வடக்கே அல்பேனியா, யுகோஸ்லேவோக்கியா, பல்கேரியா, கிழக்கே அகாயாக் கடல், துருக்கி. மேற்கே அயோனியன் கடல், தெற்கே மத்தியதரைக்கடல். ரோமர் காலத்தில் கிரேக்க நாட்டின் ஒரு பகுதி அகாயா என்று அழைக்கப்பட்டது.

**ஏதன்ஸ் (அத்தேனே)**

கிரேக்க நாட்டின் தலைநகர். ஏதன்ஸின் மக்கள் தொகை சுமார் 30 லட்சம். கிரேக்க கலாச்சாரத்தின் மையமாக இந்தப் பட்டணம் இருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இந்த பட்டணத்தில் வசித்த மக்க ளின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாக விக்கிர கங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அதில் ஒன்று அறியப்படாத தேவனுக்கு என்று இருந்தது (அப்.17: 16-34).

அத்தேனே என்ற தேவதையின் பெயரை அடிப்படையாகக் கொண்டு இது ஏதன்ஸ் (அத்தேனே) என்று அழைக்கப்பட்டது. அக்ரோபோலிஸ் என்ற குன்று இந்த பட்டணத்தின் மையத்திலுள்ளது. இந்தக் குன்றில் பல கோவில்கள் கட்டப்பட்டிருந்தன. இந்தக்

குன்றின் ஒரு பகுதியில் மார்ஸ்மேடை என்ற இடம் இருக்கிறது. இந்த இடத்தில் பொதுக்கூட்டம் நடத்தி, தத்துவங்களைக் குறித்து வாதிடுவது வழக்கம். இந்தக் குன்றுக்கு வடக்கே சந்தைவெளி இருந்தது. இந்த இடத்தில் புகழ்பெற்ற கிரேக்க மேதை சாக்ரடிஸ், தன் தத்துவங்களை போதித்து வந்தான். பின்பு இதே இடத்தில்தான் ஹெம்லாக் என்ற விஷத்தைக் குடிக்க கட்டளை பெற்று மரித்தான். அவனுடைய போதனைகளைப் பின்பற்றின முக்கிய தத்துவ ஞானிகள் பிளேட்டோ, அரிஸ்டாட்டில்.

**பெரோயா**

தெசலோனிக்கே பட்டணத்திலிருந்து தென் மேற்கில் சுமார் 80 கி.மீ. தூரத்திலிருக்கிறது. இதன் தற்காலப் பெயர் பெரியா. இந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் பவுல்மூலம் பேசப்பட்ட தேவ வாக்கியங்களை ஏற்றுக்கொண்டு வேதவசனத்தை ஆராய்ந்து பார்க்கிறவர்களாயிருந்தார்கள். எனவே இவர்கள் தெசலோனிக்கேய சபையாரைவிட நற்குணசாலிகளாக இருந்தார்கள் என்று வேதம் சாட்சி கூறுகிறது (அப்.17:10,11).

உலகில் பல இடங்களில் நடக்கும் வேதபாட திட்டத்திற்கு 'பெரியன்' என்று பெயர் வைப்பது இந்த ஊர் பெயரை அடிப்படையாகக் கொண்டுதான் என்பதை மனதில் கொள்ளவும் (எக்ளிசியாவிலும் உபதேசங்களை விளக்கும் பகுதிக்கு பெரோயர் பகுதி என்று வைத்துள்ளோம்). பவுல் மறுபடியும் இந்த பட்டணத்தை சந்தித்தார் என எண்ண இடமுண்டு (அப்.20:1-5).

## கொரிந்து

ஏதன்ஸிலிருந்து சுமார் 60 கி.மீ. மேற்கே கொரிந்து இருந்தது. அகாயா கடலுக்கும் அயோனியா கடலுக்கும் இடையிலிருந்த ஓர் குறுகிய நிலப்பரப்பில் கொரிந்து இருந்தது. இதற்கு ஆங்கிலத்தில் **ISTHMAS** என்று பெயர். ஆசியாவிலிருந்து இத்தாலிக்குச் செல்லும் கப்பல்கள் இந்த நிலப்பரப்பைச் சுற்றிச்செல்ல சுமார் 300 கி.மீ. பயணம் செய்ய வேண்டும். இந்த கடல் வழியில் பாறைகள் அதிகம். மேலும் எப்போதும் புயல் வீசும் ஆபத்து உண்டு. எனவே கப்பல்கள் தங்கள் சரக்குகளை ஒரு கடற்கரையில் இறக்கி தரைமார்க்க மாக 6 கி.மீ. கடந்தால் அடுத்த கடலுக்கு சென்று அடுத்த கப்பலில் சரக்குகளை ஏற்றிவிடலாம்.

இப்படி இரண்டு கடலையும் பிரிக்கின்ற பகுதி யில் கொரிந்து இருந்ததால் எப்போதும் பல நாட்டு பயணிகள் இங்கே வந்து தங்கிப்போவது வழக்கம். இந்த இரண்டு கடல்களையும் இணைக்கும் கால்வாயை வெட்டும் வேலையை ரோம மன்னன் நீரோ, கி.பி. 66ல் பொன் மண்வெட்டியால் ஆரம்பித்து வைத்தான். ஆனால் வேலை தொடர்ந்து நடைபெறவில்லை. கி.பி.1881-1893 ஆண்டுகளில் இந்த கால்வாய் வெட்டி முடிக்கப்பட்டது.

கொரிந்து பட்டணத்திற்கு அருகில் கெங்கிரேயா என்ற ஊர் இருந்தது (அப்.18:18; ரோமர் 16:1). கொரிந்து பட்டணத்திற்கு தெற்கே 1500 அடி உயர குன்றில் அப்ரோடைட் என்ற "அன்புத் தேவதையின்" கோவில் இருந்தது. இதைச் சுற்றிலும் 1000 தாசிகள் ஆடம்பர வீடுகளில் குடியிருந்தனர். ஒழுக்கக்கேடான காரியங் களுக்கு கொரிந்து முக்கிய இடமாக அமைந்தது.

பவுல் காலத்திலிருந்த கொரிந்து இப்போது இல்லை. தற்காலத்தில் ஓர் கொரிந்து பட்டணம் இருக்கிறது. பண்டைகால கொரிந்துவிலிருந்து வடகிழக்கில் 6 கி.மீ. தூரத்தில் நவீன கால கொரிந்து இருக்கிறது.

பவுல் கொரிந்து பட்டணத்தில் 11/2 ஆண்டுகள் தங்கி ஊழியம் செய்தார். இங்கே குடியிருந்த ஆக்கில்லா பிரிஸ்கில்லா தம்பதிகளுடன் தங்கி அவர் களுடன் கூடார வேலை செய்துகொண்டே நற்செய்தி யைப் பரப்பி இங்கே சபையை நிறுவினார் (அப்.18: 1-11). இந்த சபைக்கு இரண்டு நிருபங்களை எழுதி னார். தெசலோனியருக்கு எழுதின முதலாம் நிருபமும் இங்கிருந்துதான் எழுதினார் என்று நம்பப்படுகிறது.

**பத்மு தீவு**

பத்மு தீவு தற்போதுள்ள துருக்கி நாட்டிலிருந்து எபேசு பட்டணத்திற்கு தென்மேற்கில் அகாயா கடலில் சுமார் 110 கி.மீ. தூரத்திலிருக்கிறது. மிலேத்து விலிருந்து சுமார் 60 கி.மீ. தூரத்திலிருக்கிறது. இது சுமார் 12 கி.மீ. நீளமும், சுமார் 9 கி.மீ. அகலமுள்ள சிறிய தீவு. ரோமர் காலத்தில் குற்றவாளிகளை நாடு கடத்தும் இடமாக இந்த தீவு பயன்படுத்தப்பட்டது. இந்தக் குற்றவாளிகள் இங்கிருந்த சுரங்கங்களில் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர்.

கி.பி.95ல் அப்போஸ்தலனாகிய யோவான் டொ மீஷியன் என்ற ரோம பேரரசனால் இங்கே நாடு கடத்தப்பட்டார். யோவான் இங்கு இருக்கும் போது தான் தேவ வெளிப்பாடுகளைப் பெற்று வெளிப்படு த்தின விசேஷத்தை எழுதினார் (வெளி.1:9,10). இங்கே

யோவான் பெயரில் மடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. பத்மு துருக்கி நாட்டிற்கு பக்கத்திலிருந் தாலும் கிரேக்க நாட்டிற்குத்தான் சொந்தமானது.

***பிலிப்பி***

அகாயா கடலின் கடற்கரை பட்டணமாக இருந்த நெயாப்போலியிருந்து சுமார் 16 கி.மீ. தூரத்திலிருந் தது பிலிப்பி (அப்.16:11). கிரேக்க நாட்டின் வடபகுதி மாசிடோனியா என்று அழைக்கப்படுகிறது (மக்கதோ னியா). அந்தப் பகுதியில் பிலிப்பி பட்டணமிருந்தது. மக்கதோனியா மகா அலெக்ஸாண்டர் பிறந்து வளர்ந்த இடம். அலெக்ஸாண்டரின் தகப்பன் பெயர் பிலிப்பி. அவன் பெயரில்தான் பிலிப்பி பட்டணம் கி.மு.356ல் கட்டப்பட்டது. அகஸ்துராயன் என்பவன் (அவரின் மற்றொரு பெயர் ஆக்டோவியஸ்) வெற்றியடைந்த பின் பிலிப்பி பட்டணத்தை ரோமர் குடியிருப்பு பகுதி யாக மாற்றினான்.

பவுலும் சீலாவும் ஐரோப்பா கண்டத்திற்குள் கால் எடுத்து வைத்தது இந்த பிலிப்பி பட்டணத்திற்கு வந்ததின்மூலம்தான். இங்கே லீதியாளை கிறிஸ்து வுக்குள் நடத்தி அவள் வீட்டில் தங்கி ஊழியம் செய் தனர் (அப்.16:12-15). ஐரோப்பாவில் நிறுவப்பட்ட முதல் சபை பிலிப்பி சபைதான்.

பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டதும், பின்பு அற்புதமாய் சிறைச்சாலை கதவுகள் திறக்கப்பட்டதும், சிறைச்சாலை அதிகாரி குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டதும் தெளிவாக அப்.16ல் விவரிக்கப்பட்டுள்ளது. இங்கு நிறுவப்பட்ட சபைக்கு

பிலிப்பியர் நிருபம் எழுதப்பட்டது. பிலிப்பி பட்டணம் இருந்த இடத்தின் நவீனகாலப் பெயர் பெலிபெடஜிக்.


**தெசலோனிக்கா**

இதன் தற்காலப் பெயர் சலோனிக்கா. மாசிடோனியா பகுதிக்கு தலைநகர். பிலிப்பி பட்டணமிருந்த இடத்திலிருந்து சுமார் 160 கி.மீ. தென்மேற்கில் இருக்கிறது. இதன் மக்கள் தொகை சுமார் ஏழு லட்சம். அலெக்ஸாண்டரின் சகோதரியின் பெயர் தெசலோனிக்கி. அவள் பெயரால் இந்த பட்டணம் கி.மு.316ல் கட்டப்பட்டது.

பவுல் இந்த பட்டணத்திற்கு வந்து பிரசங்கித்து சபையை நிறுவினார் (அப்.17:1-9). உலகத்தை கலக்குகிறவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள் என்ற பெயர் இங்கேதான் பெற்றார்கள். இங்கே நிறுவப்பட்ட சபைக்கு பவுல் இரண்டு நிருபங்களை எழுதினார்.



# இத்தாலி



இத்தாலி தேசம் வேதாகம நிகழ்ச்சிகளுடன் மிக நெருக்கமான நாடு என கூறலாம். குறிப்பாக புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ரோமை தலைநகரமாகக் கொண்டு விளங்கிய இத்தாலி நாடு அரசியலோடும் பின்பு கிறிஸ்து மார்க்கத்தோடும் அதிக தொடர்புடையதாயிருந்தது. "சகல பாதைகளும் ரோமுக்கு நேராய் போகின்றன" என்ற பழமொழிக்கேற்ப ரோமாபுரி முக்கிய நகரமாக திகழ்ந்தது. ரோமாபுரி உலகை ஆட்சி செய்தது என்று கூறலாம்.

*இத்தாலி நாட்டைப் பற்றி சில குறிப்புகள்*

மத்திய தரைக்கடலை அடுத்துள்ள ஒரு தீபகற்ப நாடு இது. வடக்கே இதன் எல்லையாய் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகள் அமைந்துள்ளன.

- ✦ இதன் பரப்பளவு : 3,01,000 ச.கி.மீ.
- ✦ மக்கள் தொகை : சுமார் 5.7 கோடி
- ✦ கல்வி கற்றோர் : 97%
- ✦ அரசாங்க மொழி : இத்தாலி
- ✦ தலைநகர் : ரோம்
- ✦ மக்கள் தொகை : சுமார் 33 லட்சம்
- ✦ முக்கிய நகரங்கள் : மிலான், நேப்பிள்ஸ், டுரின், ஜெனோவா, பிளாரன்ஸ்.

✦ மார்க்கம் : 1984 வரை ரோமன் கத்தோலிக்க மார்க்கம் அரசாங்க மார்க்கமாயிருந்தது. தற்போது எல்லா மார்க்கங்களும் வளர சட்டம் அனுமதிக்கிறது.

✦ கிறிஸ்தவம் : 80% (இதில் ரோமன் கத்தோலிக்கர் 78.4%)

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாலஸ்தீனா ரோமர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பிலாத்து ரோமப் பேரரசனால் நியமிக்கப்பட்ட அதிகாரியாக இருந்தான். 'ராயன்' என்பது ரோம பேரரசனைக் குறிக்கும் பட்டம் (இது போலவே எகிப்தின் ராஜாக்கள் 'பார்வோன்' என்ற பட்டப்பெயரில் அழைக்கப்பட்டனர்).

அகஸ்துராயன் காலத்தில்தான் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்ற கட்டளை ரோமாபுரியிலிருந்து வெளிப்பட்டது. இதன்படி யோசேப்பும், மரியாளும் பெத்லகேமுக்குப் போனார்கள் (லூக். 2:1-5). திபேரியு ராயன் காலத்தில் யோவான் ஸ்நானனுக்கு கர்த்தருடைய வார்த்தை வெளிப்பட்டது. இந்த நாட்களில்தான் இயேசு தமது ஊழியத்தை ஆரம்பித்தார் (லூக்.3:1,2,23).

பவுல் ஊழியம் செய்த அநேக இடங்கள் ரோமர் ஆட்சிக்கு கீழ்ப்பட்டிருந்த இடங்களே என்பது குறிப்பிடத்தக்கது.

## ரோம்

இந்த நகரம் கி.மு.75ல் உருவாக ஆரம்பித்தது என்பது பாரம்பரிய நம்பிக்கை. இதன் முதல் அரசன் ரோமுலஸ். மத்திய தரைக்கடலிலிருந்து சுமார் 25 கி.மீ. தூரத்தில் ரோமாபுரி அமைந்துள்ளது. டைபர்

என்ற நதிக்கரையில் ரோம் கட்டப்பட்டுள்ளது. இது சிறிய குன்றுகளின்மேல் கட்டப்பட்ட நகரம். ஆரம்ப நாட்களில் பாலடின் என்ற சிறிய குன்றின்மேல் கட்டப் பட்ட சிற்றூராக இருந்தது. பின்பு அருகிலுள்ள குன்று களிலும் மக்கள் குடியேறினர். பிந்திய நாட்களில் மிகப்பெரிய நகரமாயிற்று. இந்த ஏழுகுன்றுகளின் பெயர்களும் பின்வருமாறு:

1.பாலடின், 2.கேபிடலின், 3.குரினல், 4.கேலியன், 5.அவண்டியர், 6.எஸ்குலின், 7.விமினல்.

பவுலின் நாட்களில் ரோமபுரி உலகின் சிறந்த நகரமாக விளங்கிற்று. அந்நாட்களிலேயே இதன் மக்கள் தொகை 10 லட்சத்திற்கும் அதிகமாயிருந்தது. இங்கே இருந்த சபைக்கு ரோமருக்கு எழுதின நிருபம் அனுப்பப்பட்டது. பவுல் ராயனிடம் அனுப்பப்பட்ட பின் இங்கே கொண்டு வரப்பட்டு ஒரு வீட்டில் காவலில் வைக்கப்பட்டிருந்ததாக அப்போஸ்தல நடபடிகளின் கடைசி பகுதியில் வாசிக்கின்றோம். பவுல் இரத்தச் சாட்சியாய் மரித்ததும் இந்த பட்டணத்தில் தான்.

ரோமப் பேரரசனாக வந்த நீரோ, ரோமாபுரியை தீ வைத்து கொளுத்திவிட்டு அந்தப் பழியை கிறிஸ்த வர்கள் மேலே சுமத்தினான். இதனால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். கிறிஸ்தவனாக இருப்பது சட்டப்படி குற்றமாக அறிவிக்கப்பட்டது. நீண்ட காலத் திற்குப்பின் கான்ஸ்டான்டைன் என்ற ரோமப் பேரரசன் கிறிஸ்தவனான பின்பு கி.பி.313ல் இயற்றிய சட்டத் தின்படி இந்த உபத்திரவம் முடிவுக்கு வந்தது.

**அப்பியுரம்**

பவுல் கப்பலை விட்டிறங்கி ரோமாபுரிக்குள் வந்த பாதையில் இந்த அப்பியுபுரம் என்ற இடம் இருக்கிறது (அப்.28:15).

**மார்ட்டின் சிறைச்சாலை**

ரோமாபுரியிலுள்ள இந்த இடத்தில் பவுல் தற்காலிகமாக பாதுகாக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

**திரு. பவுலின் ஆலயம்**

இந்த இடத்தில்தான் பவுல் தலை வெட்டப்பட்டு மரித்ததாக நம்பப்படுகிறது. அந்த நாட்களில் இது ரோமாபுரிக்கு வெளியே இருந்தது.

**பரிசுத்த படிகள்**

எருசலேமில் இயேசு நின்று நியாயம் விசாரிக்கப் பட்ட படிகளை இங்கே கொண்டுவந்து வைத்துள்ளனர். இந்தப் படிகளில் முழங்காலில் நின்று ஜெபித்துக் கொண்டிருந்தபோதுதான் "விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்" என்ற சத்தியத்தைப் பற்றிய வெளிப் பாட்டை மார்ட்டின் லூத்தர் பெற்றார்.

**கலோசியம்**

கிறிஸ்தவர்களை உயிரோடு பசியுள்ள மிருகங் களுக்கு இரையாக்கிய இடம் இது. திறந்த வெளி அரங்கமாக சுமார் 50,000 பேர் உட்கார்ந்து பார்க்கக் கூடிய வசதியுடையதாக கட்டப்பட்டிருந்தது. இதன் சிதைந்த பகுதிகளை இன்றும் காணலாம்.

**வத்திக்கான் நகரம்**

ரோமர் கத்தோலிக்க சபையின் தலைமை ஸ்தானம்.

இதன் பரப்பளவு : 0.43 ச.கி.மீட்டர். சுமார் 110 ஏக்கர். இது ரோமாபுரியின் மையத்திலுள்ளது. இந்த நாட்டின் மக்கள் தொகை 755 பேர்.

இந்த நகரம் மிகச் சிறியதாக இருந்தாலும் தனி நாடு அந்தஸ்துள்ளது. உலகிலுள்ள சுமார் 90 கோடி ரோமன் கத்தோலிக்கர்களின் தலைவராக உள்ள போப் இதில் வாசம் பண்ணுகிறார். உலகிலேயே மிகச் சிறிய நாடு இது. இதற்கென்று தனி தபால் தலை, தபால் ஆபீஸ் உண்டு. தனியான ரயில்வே ஸ்டேஷன், செய்தித்தாள், வானொலி நிலையம், சிறைச்சாலை உண்டு. இதற்கென தனி பாஸ்போர்ட் உண்டு.

# சைப்ரஸ்

**சைப்ரஸ் குடியரசு**

அப்போஸ்தலனாகிய பவுல் அந்தியோகியா சபையிலிருந்து தனது முதலாம் மிஷனரி பயணத்தை ஆரம்பித்தபோது சந்தித்த முதல் நாடு சீப்புரு தீவு (அப்.13:4).

**சைப்ரஸ் தீவு பற்றிய சில குறிப்புகள்**

சிரியா நாட்டிற்கு மேற்கே சுமார் 100 கி.மீ. தூரத்தில் மத்திய தரைக்கடலின் கிழக்கு ஓரத்தில் இந்தத் தீவு இருக்கிறது. மத்திய தரைக்கடலில் இருக்கும் மூன்றாவது பெரிய தீவு இது.

- ✦ பரப்பளவு : 5896 ச.கி.மீட்டர்
- ✦ மக்கள் தொகை : 5,94,200 (இவர்களில் 97.1% கிரேக்கர்கள்).
- ✦ கல்வி கற்றோர் : 94.5%
- ✦ அரசாங்க மொழி : கிரேக்கம்
- ✦ தலைநகர் : நிகோசியா
- ✦ மக்கள் தொகை : 2,36,000.

**வடக்கு சைப்ரஸ் குடியரசு (துருக்கியர் பகுதி)**

- ✦ பரப்பளவு : 3355 ச.கி.மீ.

- ✦ மக்கள் தொகை : 1,77,000 (இவர்களில் 98.7% துருக்கியர்).
- ✦ கல்வி கற்றோர் : 94%
- ✦ அரசாங்க மொழி : துருக்கி
- ✦ தலைநகர் : லெப்ட்கோசா (நிகோசியா பட்டணத்தின் ஒரு பகுதி)
- ✦ மக்கள் தொகை : 77000.
- ✦ கிறிஸ்தவர் : 78%
- ✦ முஸ்லீம் : 22% (வடக்கு சைப்ரஸர்)

பர்னபாவின் பிறப்பிடம் இந்தத் தீவு என்பது கவனத்திற்குரியது. எருசலேமில் ஸ்தேவான் இரத்தச் சாட்சியாய் மரித்தபோது ஏற்பட்ட உபத்திரவத்தினால் கிறிஸ்தவர்கள் பல இடங்களுக்கும் சிதறிப்போன போது, சீப்புரு தீவிற்கும் வந்து அவர்கள் நற்செய்தி அறிவித்ததாகக் காண்கிறோம் (அப்.11:19-21).

பவுலும் பர்னபாவும் தங்கள் முதல் மிஷனரிப் பயணத்தில் முதலாவது வந்தது இந்த சீப்புரு தீவிற்கே (அப்.13:1-4). கி.பி.45ல் சாலமி என்ற பட்டணத்தில் இது நடந்தது. அக்காலத்தில் சாலமி பெரிய பட்டணமாயிருந்திருக்க வேண்டும். பவுலும் பர்னபாவும் இங்கே வந்து இறங்கினர். தற்போதுள்ள பேமகஸ்டா என்ற ஊருக்கு தெற்கே சுமார் 5 கி.மீ தூரத்தில் இது இருந்தது. இன்று சாலமி என்ற பட்டணம் இல்லை. அக்காலத்திலிருந்த அழகிய கடற்கரைப்பகுதி இப்போது மண் மேடாகி விட்டது.

சாலமியில் பல யூத ஜெப ஆலயங்களிருந்தன. இவைகளில் பவுலும், பர்னபாவும் பிரசங்கித்தனர் (அப்.13:5). பிந்திய நாட்களில் பர்னபா இந்த சாலமியில் இரத்த சாட்சியாய் மரித்ததாக பாரம்பரியம் கூறுகிறது. பர்னபாவின் ஞாபகர்த்தமாக இங்கே ஒரு ஆலயம் கட்டப்பட்டது.

சாலமி பட்டணத்தைவிட்டு பவுலும் பர்னபாவும் பாப்போ என்ற தீவிற்கு வந்தனர். இந்த பாப்போவிற்கு தற்காலப் பெயர் பேப்போ. இது சைப்ரஸ் தீவிற்கு தலைநகராக இருந்தது. இந்த பாப்போவில் கிரேக்கர்கள் ஆராதித்த 'அப்ரோடைட்' என்ற தேவதையின் கோவில் இருந்தது. இங்கே ரோம அதிபதியாக இருந்த செர்கியு பவுலுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தான்.

மாயவித்தைக்காரனும், கள்ளத்தீர்க்கதரிசியுமான ஒருவன் இருந்தான். அவன் பர்யேசு என்றும் எலிமா என்றும் அழைக்கப்பட்டான். கிறிஸ்துவின் நற்செய்திக்கு எதிராயிருந்த அவனை பவுல் கடிந்துகொண்ட போது, அவன் மேல் தேவ கோபாக்கினை வந்து அவன் குருடனானான். இந்த அற்புதத்தைக் கண்ட செர்கியு பவுல் என்ற அதிபதி இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தான் (அப்.13:6-11).

பர்னபா பவுலை விட்டு பிரிந்த பின்பு மாற்குவைக் கூட்டிக்கொண்டு மறுபடியும் சீப்புரு தீவிற்குச் சென்றான் (அப்.15:39). சீப்புரு தீவில் நல்ல சபை உருவாயிற்று. பிந்திய நாட்களில் நைசியாவில் கி.பி.325ல் நடந்த முக்கிய கிறிஸ்தவ மாநாட்டில் கலந்துகொள்ள மூன்று பிஷப்புகள் இங்கிருந்து வந்ததாக சபை சரித்திரம் கூறுகின்றது.

## இலவசமாய் வேதாகம நாடுகளை சுற்றி வாருங்கள்

வேதாகம நாடுகளுக்கு நேரில் செல்வது ஓர் சிறப்பு அனுபவம் அப்படி நேரில் செல்ல முடியாதவர்களுக்கும், ஏற்கனவே சென்று வந்தவர்களுக்கும் இந்த புத்தகம் மிகுந்த பயனுள்ளதாயிருக்கும்.

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடந்த நாடுகள் பதினொன்று . இந்த நாடுகளை நேரில் சென்று பார்த்துவர பல இலட்சங்கள் செலவாகும். ஆனால் இந்த புத்தகத்தின் மூலம் இலவசமாய் இந்த நாடுகளை சுற்றிவர உங்களை அன்புடன் அழைக்கின்றார் ஆசிரியர்.

பேராயர் ராஜமணி இந்த நாடுகளில் பலவற்றிற்க்கும் பயணம் செய்துள்ளார். இவர் பல்லாண்டுகள் வேதாகம கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றியுள்ளார். இந்த புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் மிகுந்த பயனடைவீர்கள் என்று நம்புகிறோம்.